தொல்காப்பியப் பொருளதிகாரம்

கருத்துரையும் ஆங்கில மொழிபெயர்ப்பும்

620

PORUḶATIKĀRAM OF TOLKĀPPIYAM

An English Version

A. A. Manavalan

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை - 600 113.

தொல்காப்பியப் பொருளதிகாரம்

கருத்துரையும் ஆங்கில மொழிபெயர்ப்பும்

(அகத்திணை இயல் - புறத்திணை இயல்)

Poruḷatikāram of Tolkāppiyam

An English Version

(Akattiṇai iyal and Puṟattiṇai iyal)

A.A. MANAVALAN

Visiting Professor

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.ஐ.டி. வளாகம், தரமணி,

சென்னை - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Porulatikāram of Tolkāppiyam (An English Version) (Akattiṇai iyal and Puṟattiṇai iyal)
Author	:	A.A. Manavalan Visiting Professor, IITS, Chennai - 113.
Publisher	:	International Institute of Tamil Studies, C.I.T. Campus, Tharamani, Chennai - 600 113.
Publication No.	:	315
Language	:	Tamil & English
Date of Publication	:	1998
Edition	:	First
Paper used	:	TNPL 16 Kg Super Printing
Size of the book	:	1/8 Demy
Printing types	:	10 points
No. of pages	:	xlviii + 127
Prince	:	Rs. 40/-
No. of Copies	:	1000
Printed by	:	**M/s. PAVAI PRINTERS (P) LTD.,** 142, Jani Jan Khan Road, Royapettah, Chennai - 600 014.
Subject	:	Grammer

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

அணிந்துரை

வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலகில் வாழ்ந்த தமிழ் மக்களின் மொழிக்கு இலக்கணம் கூறும் நூல் ஒல்காப் பெரும்புலவர் தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம்.

தமிழ் மொழியின் தொன்மையையும், சிறப்பையும் எடுத்துரைபபதற்கும், தமிழ் மக்களின் நாகரிகத்தை நவில்வதற்கும் நமக்கு அடிப்படைச் சான்றாதாரமாக விளங்குகிறது.

இத்தகைய சிறப்புப் பெற்ற தொல்காப்பியத்திற்கு உரைகள் கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் எழுதப்பட்டன. தொல்காப்பியப் பெருமைக்கு உரையாசிரியர்களின் பங்களிப்பு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியத்திற்குப் பண்டைய உரையாசிரியர் உரைகளோடு இன்றுவாழும் அறிஞர்களும் உரை எழுதி வருகின்றனர். இத்தகைய பெருமை பெற்றது தொல்காப்பியம்.

தொல்காப்பிய உரைகள் அனைத்தையும் தொகுத்து ஒரே நூலாக வெளியிட வேண்டும் என்ற நோக்கில் திராவிடப் பல்கலைக் கழக இணைவேந்தரான வ.அய். சுப்பிரமணியம், ஆபிரகாம் அருளப்பன் ஆகிய இருவரும் சொல்லதிகாரத்தின் முதல் பகுதிக்கு முதன் முதலாக உரைவளம் வெளியிட்டனர்.

இம்முயற்சியைத் தொடர்ந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மேனாள் இயக்குநர் முனைவர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள் இந்நிறுவனத்தின் 'தொல்காப்பியத் திட்டப் பணிக்கு' வித்திட்டார். பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் அவர்கள் தொல்காப்பிய உரைகள் அனைத்தையும் தொகுத்து ஒவ்வொரு இயலையும் தனி நூலாக்கித் தந்து இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்தார். இந்நிலையில் 27 இயல்களையும் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இங்ஙனம் தமிழ் மொழி சீரிளமைத் திறத்திற்கு அடித்தளமாக அமைந்த தொல்காப்பியத்தைப் பரப்பும் பணியில் இந்நிறுவனம் நீண்ட காலமாகப் பணி செய்து வருகிறது.

மேலும் தமிழ் அறியாதவர்களுக்குத் தொல்காப்பியத்தின் பெருமையை அறிவிக்க நிறுவனம் ஆங்கிலத்திலும் நூல் வெளியிட்டுள்ளது. இந்நிறுவனத்தில் பணியாற்றிய பேராசிரியர் ஆல்பர்ட் அவர்கள் தொல்காப்பியம், எழுத்து, சொல் ஆகிய அதிகாரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அவரது **"tholkappiyam - phonology, morphology'** எனும் நூலை இந்நிறுவனம் 1985இல் வெளியிட்டுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறைத் தலைவராகப் பணியாற்றிய பேராசிரியர் முனைவர் அ.அ. மணவாளன் அவர்கள் நுண்மாண் நுழைபுலம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர். மொழியியல், ஒப்பிலக்கியம் முதலிய துறைகளில் ஆழ்ந்த புலமை மிக்கவர். இவர் இந்நிறுவனத்தின் தொடக்கக் காலத்தில் கல்விசார் அலுவலராகப் பணியாற்றி இந் நிறுவனத்திற்குப் பெருமை சேர்த்தவர். இவரது கட்டுரைகளும் நூல்களும் ஆழமும் தரமும் சிறப்பும் வாய்ந்தவை. இவரது **Tamil Research through Journals, 20-ஆம் நூற்றாண்டு இலக்கியக் கோட்பாடுகள்** முதலிய நூல்களை இந்நிறுவனம் முன்னரே வெளியிட்டுள்ளது.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும் என்று விழுமிய எண்ணத்தில் இந் நிறுவனத்தில் வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றிய முனைவர் அ.அ. மணவாளன் அவர்கள் **'தொல்காப்பிய பொருளதிகாரம் கருத்துரையும் ஆங்கில மொழிபெயர்ப்பும்'** (அகத்திணை இயல் - புறத்திணை இயல்) எனும் திட்டப் பணியினைச் செய்து அளித்துள்ளார். இத்திட்டப்பணி இப்போது நூலாக வெளிவருகிறது.

நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டி வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு. த.இரா. சீனிவாசன் இ.ஆ.ப., அவர்களுக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த பாவை அச்சகத்தார்க்கு எங்கள் நன்றி.

இயக்குநர்.

முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 1997-1998-ஆம் ஆண்டில் வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றிய பொழுது நிறுவன இயக்குநர் டாக்டர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களின் கருத்துப்படி மேற்கொண்ட ஆய்வுத் திட்டத்தின் பயனாகத் ''தொல் காப்பியப் பொருளதிகாரம் - கருத்துரையும் ஆங்கில மொழி பெயர்ப்பும்'' என்னும் இந்நூல் வெளியிடப்படுகிறது. பொருளதி காரத்திற்கு நிறுவனம் மூலமாக ஓர் ஆங்கில மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டும் என்னும் நோக்கத்தில் மேற்கொண்ட திட்ட மாயினும் தமிழ் வடிவத்தையும் ஆங்கில வாசகர்கட்கு அளிக்க வேண்டுமென்னும் கருத்தாலும், தொல்காப்பிய நூற்பாக்கள் கருதும் பொருளைச் சுருக்கமாகத் தமிழில் தருவது தமிழ் வாசகர் கட்கும் பயன்படும் என்னும் எண்ணத்தாலும் இந்த நூலில் தமிழ். ஆங்கிலம் என்னும் இருவகை வடிவங்களும் தரப்பட்டுள்ளன. மேலும், மூலநூல் செய்யுள் வடிவில் இருக்குமானால் அதை உரை நடைப் படுத்திப் பின்னர் அதன் அடிப்படையில் மொழி பெயர்ப்பது மூலநூல் கருத்தை உள்ளவாறு எடுத்துரைக்கும் வாய்ப்பை மிகுதிப்படுத்தும் என்னும் மொழி பெயர்ப்புக் கோட் பாட்டிற்கு ஏற்பவும் இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொருளதிகாரத்திற்கு இதுவரை பல ஆங்கில மொழி பெயர்ப்புகள் வெளிவந்துள்ளன. அவையாவன:

1. இ.எஸ். வரதராஜ அய்யர்.
   அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் 1948.

2. பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரி
   அகத்திணையியல், புறத்திணையியல் 1950 **களவியல், கற்பியல், பொருளியல் மெய்ப் பாட்டியல், உவமையியல்,** 1952. **செய்யுளியல், மரபியல்** 1956.

3. எஸ். இலக்குவனார், பொருளதிகாரம் முழுமையும் 1963.

4. நிர்மல் செல்வமணி. **அகத்திணையியல்** 1989.

இவை தவிர, R. வாசுதேவ சர்மாவும் வித்துவான் வடிவேல் பிள்ளையவர்களும் அகத்திணை, புறத்திணை இயல்களை முறையே 1933, 1934 ஆம் ஆண்டுகளில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளதாக நிர்மல் செல்வமணி அவர்கள், மேற் குறிப்பிட்ட தம் நூலின் முன்னுரையில் குறித்துள்ளார். இவ் இரு மொழி பெயர்ப்புகளையும் காணும் பேறு எனக்கு வாய்க்கவில்லை. மேலே சுட்டிய நான்கு மொழிபெயர்ப்புகளை மட்டும் ஆழமாகப் படித்துப் பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றேன். என்னுடைய இந்தச் சிறு மொழிபெயர்ப்புப் பணிக்கு இவை நான்கும் உடன்பாடு, எதிர்மறை என்னும் இரு நிலைகளிலும் பயன்பட்டுள்ளன. இம் முன்னோர்க்கு என் உளமார்ந்த நன்றி.

ஈரைந்து திங்களில் பகுதி நேரமாகச் செய்யப்பெற்ற இரண்டே இயல்களுக்கான இந்த மொழிபெயர்ப்பு பல்வேறு வகையான சிக்கல்களை இனங் காணும் வாய்ப்பினை எனக்கு நல்கியுள்ளது. ''கம் விண்ட் கம் வெதர்'' என்னும் விவிலியம் சார்ந்த விரிவுரையை மொழி பெயர்த்த போதும் (1961), வங்கியியல், வரலாறு ஆகிய துறைகளைச் சார்ந்த பாடநூல்களை மொழி பெயர்க்கும் பணியில் மொழியாசிரியனாகச் செயற் பட்டபோதும் (1963), சிந்தனையாழத்தின் சிகரமான அரிஸ்டாடிலின் ''கவிதை யியலை'' மொழிபெயர்த்த போதும் (1976), சிலம்பு, மணிமேகலை, கம்பராமாயணம் ஆகிய காப்பியப் பகுதிகள் பலவற்றை ஆய்வு நோக்கில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த போதும் (1979), தெலுகு மகா கவிகளுள் ஒருவராகிய போதனரின் கற்பனை சார்ந்த காப்பி யம், தண்டகம் போன்ற நூல்களைப் பற்றிய திறனாய்வு நூலை மொழி பெயர்த்த போதும் (1981), சிலப்பதிகாரம், மில்டனின் 'துறக்கவீழ்ச்சி'' ஆகிய காப்பியங்களின் முறையே ஆங்கில, தமிழ் பெயர்ப்புகளைச் சீர்தூக்கும் ஆய்வேடுகளுக்கு வழிகாட்டியாகச் செயற்பட்ட போதும் தோன்றாத பல ஐயங்கள், எதிர் கொள்ளாத பல சிக்கல்கள் பொருளதிகார மொழி பெயர்ப்பின் போது என்னை மருட்டின. இந்த ஐயங்களைத் தெளிவித்துக் கொள்ளவும், சிக்கல் களை விடுவித்துக் கொள்ளவும் வேண்டித் தொல்காப்பிய அறிஞர்கள்

சிலரையும், தொல்காப்பியம் பற்றிய ஆய்வுரைகள், நூல்கள் சில வற்றையும் அணுகினேன். ஐயங்கள் சில அகன்றன. பல என்னைக் கண்டு இரங்கின. சிக்கல்கள் சில அவிழ்ந்தன; பல சிலந்தி வலை போல மீண்டும் பின்னிக் கொண்டன. நான் சந்திக்க இயலாத அறிஞர்களாலும், நான் பார்த்துப் பயனடையாத சில நூல்களாலும், இனி வரும் மொழிபெயர்ப்பாளர்களாலும், தெளிவிக்கப்பட லாம், தீர்க்கப்படலாம் என்னும் நம்பிக்கையின் அடிப்படையில், இப்பணியில் நான் எதிர் கொண்ட சிக்கல்களில் இன்றியமை யாத சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இருவகைச் சிக்கல்கள்

பொதுவாக மொழிபெயர்ப்புப் பணியில் இருவகையான செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. ஒன்று, தரு மொழிப் பாடத்தின் பொருளை (மூலநூற்பொருளை) உள்ளவாறு உணர்ந்து கொள்ளுதல்; மற்றது, அவ்வாறு உணர்ந்து கொண்ட மூலப் பொருளை மற்றொரு மொழியின் வடிவத்திற்குப் பெயர்த்து (மாற்றி) அமைத்தல். இவற் றுள் மூல நூற்பொருளை உணர்ந்து கொள்வதில் எதிர்ப்படும் சிக்கல் களை மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் என்று கூறுவதில்லை. மொழி மாற்றி அமைப்பதில் ஏற்படும் சிக்கல்களே அவ்வாறு அழைக்கப்படு கின்றன. எனவே மூலநூலுக்குப் பொருள் காணுதல் (interpretation), கண்ட பொருளைக் கண்டவாறே பிற மொழிக்கு ஏற்றுதல் (translation) என்னும் இருவகைச் செயற்பாடுகளுக்கு ஒரு மொழி பெயர்ப்பாளன் இலக்காகிறான். இவ் இரு வகைச் செயற்பாடுகளி லும் நேரும் சிக்கல்களை எதிர் கொண்டு, அவற்றை விடுவித்துத் தன் பணியை நிறைவேற்றும் கடமையுடையவனாக மொழிபெயர்ப் பாளன் விளங்குகிறான்.

தருமொழிப் பாடப் பொருளை உணர்ந்து கொள்ளுதல்

இப்பணி தருமொழிப் பாடத்தின் தன்மைக்கு ஏற்ப வேறுபடும் இயல்பினது. பாடப் பொருண்மை, நூலின் வடிவம் என்னும் இரு கூறுகளுக்கேற்பப் பொருள்காணும் பணி அமையும். தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பொறுத்த வரையில், இந்த இரு கூறுகளுமே பொருள்காணும் பணியைக் கடினமாக்குகின்றன. கால இடையீடு,

ஏடெழுதுவோர், நூலின் வடிவத்தில் எதிர்ப்படும் கலைச் சொற்கள், பாடவேறுபாடுகள், பாடச் சிதைவு போன்ற பல காரணங்களால் பொருளதிகார நூற்பாக்கள் சிலவற்றிற்குப் பொருள் காணும் முயற்சியில் முழு வெற்றியைக் காண இயலவில்லை. கால இடையீடும், ஏடெழுதுவோரும், பாடபேதங்களும் இல்லாமல், வினையின் நீங்கி விளங்கிய அறிவினையுடைய முனைவனாகிய அழல் நிறக் கடவுளால் ''சுடச் சுடத் தயாரித்து'' வழங்கப் பெற்றது எனக் கருதப்படும் இறையனார் களவியலுக்கு உரை காண்பதில், ஒருமித்த கருத்தின்றி நாற்பத்தொன்பது உடன் காலப் புலவர்கள் இடர்ப்பட்டுக், காரணிகன் ஒருவனை வேண்டி நின்றனர் என்னும் தமிழில் எழுந்த முதல் உரைகாரரின் கூற்றை நோக்கும்போது, கால இடையீடு முதலான மூன்றும் நிறைந்த பொருளதிகாரத்திற்கு உரை காண்பதில் நேர்ப்படும் சிக்கல்களை எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

மூலபாடச் சிதைவுகள்

பொருள் தொடர்ச்சிக்குத் தேவையான நூற்பாக்கள் காணப்படாமை, நூற்பாக்களின் முறைவைப்பு கருத்தோட்டத்திற்கு இயையப்பொருந்தாமை, பொருளை விரித்துரைக்கும் நூற்பாக்களிடையே சீர்மைத் தன்மை காணப்படாமை, நூற்பாக்கள் சிதைந்த நிலை, பல்வேறு பாட வேறுபாடுகளைக் கொண்டிருத்தல் எனப் பல நிலைகளில் பொருளதிகார மூலம் சிதைவுபட்டிருக்கக் காண்கிறோம். இத்தகைய சிதைவுகள் அகத்திணை இயலில் மிகுதியாகவும், புறத்திணை இயலில் சிலவாகவும் காணப்படுகின்றன. இத்தகைய நிலையில் உரைவேறுபாடுகள் தோன்றுவதைத் தவிர்க்க இயலாது. அகத்திணை முதலாக மரபியல் ஈறாக உள்ள ஒன்பது இயல்களின் முறைவைப்பில் உரைகாரர்களிடையே வேறுபாடு காணப்படவில்லை. நூற்பாக்களின் எண்ணிக்கையிலும், அவற்றிற்குப் பொருள் காண்பதிலும் கருத்து வேறுபாடுகள் மலிந்து காணப்படுகின்றன.

சிதைவுகளும் பாடபேதங்களும், மற்றொன்று விரித்தலும் குறைந்த அளவில் காணப்படுவதாலும், தொல்காப்பியம் முழுமைக்கும் தோன்றிய முதல் உரை என்பதாலும், கழகப் பதிப்பான (1953), இளம் பூரணர் பாடமும் உரையும் இந்த மொழிபெயர்ப்புக்கு அடிப்படைகளாகக் கொள்ளப் பெற்றன. இளம் பூரணரின் பாடப்படி,

அகத்திணை இயலின் முதலில் உள்ள கைக்கிளை முதலாப் பெருந் திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணை என்ப. என்னும் இந்த நூற்பா இந்த இயலின் தலைச் சூத்திரம் தானா, இதற்கு முன்னர் வேறு சில நூற்பாக்கள் இருந்தனவா என்னும் ஐயம் எழுகிறது. ''முற்படக் கிளந்த'' என்னும் தொடருக்குப் பொருள் காண்பதிலும் சிக்கல் ஏற்படுகிறது. உரையாசிரியர்கள் பலரும் இதனைத் தலைச் சூத்திரமாகவே கருதி'', ''முற்படக் கூறப்பட்ட (முதன் முதலாகக் கூறப்பட்ட) ஏழு திணைகள்'' எனப் பொருள் கண்டுள்ளனர். நாவலர் சோமசுந்தர பாரதியார்,

> ''பொருட்படலத்தின் முதலில், பொருள், அகம், புறம் என இருவகைப்படும் என்பதும், அவற்றுள் ... அகத்திணை ஏழா மென்பதும் அவ்வகத்திணையும் கைக்கிளை, அன்பினைந் திணை, பெருந்திணை என ஏழாக வகுக்கப்படுமென்றும், ஆகிய இவற்றைச் சுட்டிய சில சூத்திரங்கள் அகத்திணையின் முதற்கண் இச்சூத்திரத்திற்கு முன்னே ஆசிரியரால் அமைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.... ''முற்படக் கிளந்த'' என்னும் தொடருக்கு, ''இதற்கு முன்னே ஆசிரியர் கூறிப்போந்த என்று அமையப் பொருள் காண்பதே பொருத்தமாகும்.'' என்று கூறுவதை நோக்க இது தலைச் சூத்திரம் தானா என்னும் ஐயம் வலுவடைகிறது. முற்படக் கிளத்தல் என்னும் சொற்றொடர் தொல்காப்பியத்துள் சொல்லதிகாரத்தில்,

> முற்படக் கிளவார் (38), முற்படக் கிளத்தல் (39)
> முற்படக் கிளவார் (41) முற்படக் கிளத்தல் (279)

என நான்கிடங்களில் பயின்றுள்ளது. இந்த நான்கிடங்களிலும் ''முன் கூறி, முன் சொல்லி'' என்று இளம்பூரணர் பொருள் காண்கிறார். பொருளதிகாரத்தில்,

> முற்படக் கிளந்த எழுதிணை (1)
> முற்பட வகுத்த இரண்டு (178)

என இரண்டு இடங்களிலும் 'முற்கிளந்த' (486) என ஓரிடத்திலும் இத் தொடர் பயின்றுவரக் காண்கிறோம். இவற்றுள் 'முற்பட வகுத்த'

என்பதற்கு முற்படக் (அகத்திணையியலுள்) கூறிய எனவும், 'முற் கிளந்த' என்பதற்கு மேற் சொல்லப்பட்டன என்றும் இளம்பூரணர் பொருள் காண்கிறார். இவ்வாறு ஆறு இடங்களில் முன் கூறிய, முன் சொன்ன, மேலே சொல்லப்பட்ட என்று பொருள் காணும் இளம்பூரணர், இந்த முதற் சூத்திரத்திற்கு மட்டும் அவ்வாறு பொருள் கொள்ளாமல் 'முதலில் கூறப்பட்டன' (பின்னர்க் கூறப்படுவன புறத்திணைகள்) என்று பொருள் காண்பது நம் சிந்தனைக்குரிய தாக அமைகிறது. நாவலர் பாரதியார் ''முன்னே சொல்லப்பட்ட' என்று பொருள் காண்கிறார். (காண்க. அடிக்குறிப்பு - 1). எனவே இந்த நூற்பாவிற்கு முன்னர்ச் சில நூற்பாக்கள் இருந்திருக்க வேண்டும் என்னும் பாரதியாரின் கருத்து மேலும் வலுவடைகிறது. இதனை மறுத்து மு. அருணாசலம் தம் பதிப்பில் (பக். 35-36) கூறும் வாதங்கள் பொருத்தமானவையாகத் தோன்றவில்லை. பொருளதிகாரம் முழு வதையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள பி.சா.சு. சாஸ்திரியார், 'முற்படக் கிளந்த' என்னும் தொடருக்கு, ''முன்னோர்களால் பாகு பாடு செய்யப் பெற்ற'' என்று பொருள் கூறி, இச் சிக்கலை விடுவிக்க முயல்கிறார். ஆனால் மொழிபெயர்க்கும் போது 'முன்னே கூறப்பட்ட' **(mentioned before)** என்று கூறுகிறார். என்ப என்னும் பயனிலையே இப்பாகுபாடு தொல்காப்பியர்க்கு முந்திய இலக்கணிகளால் செய் யப்பெற்றது என்பதை வெளிப்படையாக உணர்த்துவதால் சாஸ்திரி யாரின் விளக்கம் மிகையாகத் தோன்றுகிறது.

எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே (45)

என வரும் அகத்திணை இயல் நூற்பா, பிரிவின் கண் கூற்றுக்குரிய ரான நற்றாய், தோழி, கண்டோர், தலைவன் ஆகியோரின் கூற்று களைக் கூறும் நூற்பாக்களை அடுத்து வைக்கப்பட்டுள்ளது. தலைவி கூற்றுகளைக் கூறும் தனி நூற்பா காணப்பெறவில்லை. **எஞ்சியோர்** என்னும் சொல் தலைவி, பாங்கன், பார்ப்பார், பாணன், கூத்தர் போன்றோரைக் குறித்து நிற்கிறது. என நச்சினார்க்கினியர் முதலான பழைய உரையாசிரியர்களும், இக்காலக் காண்டிகை உரையாசிரிய ராகிய பால சுந்தரனாரும், உரைவளம் பதிப்பித்த மு. அருணாசலம் பிள்ளை அவர்களும் கருதுகின்றனர். இளம் பூரணர் தம்முடைய விளக்க உரையில்,

'பாங்கர் முதலாயினாரை இச் சூத்திரத்தாற் கூறுப;
தலைமகள் கூற்றுத் தனித்துக் கூறல் வேண்டும்,
இவரோடு ஒரு நிகரன்மையின்' எனின், ஒக்கும்.

தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம்
காலப் பழமையாற் பெயர்த்தெழுதுவார் விழ எழுதினார் போலும்.

ஆசிரியர், இச்சூத்திரத்**தானும்** பொருள் கொள்ள வைத்தமை யின், தலைமகள் கூற்று வருமாறு:

என்று கூறுவதை நோக்கத் தலைவிக்கு இவ்விடத்தே தனிச் சூத்திரம் கூற வேண்டும் என்பதும், அத்தகைய சூத்திரம் ஒன்று இருந்து ஏடு பெயர்த்து எழுதுவோரால் விடப்பட்டிருக்க வேண்டும் என்பதும், அவருடைய துணிபுகளாகப் பெறப்படுகின்றன. நாவலர் சோம சுந்தர பாரதியாரும் இக்கருத்தை உடன்பட்டுக் கூறுகிறார் (மு. அருணாசலம் பிள்ளை, தொல்காப்பியம் - அகத்திணையியல், மதுரைப் பல்கலைக்கழகம் 1975, ப. 486)

உடன் போக்கில் கூற்றுகள் நிகழ்த்தும் சிறுபான்மை யோரில் தலைவியும் ஒரு பாத்திரமாகையால் அவள் கூற்று களைப் பற்றிய தனிச் சூத்திரத்தைத் தொல்காப்பியர் கூறவில்லை என்று மு. அருணாசலம் பிள்ளையவர்களும் (ப. 492), தலைவிக் குரிய பொதுக்கிளவிகள் அரியவாகலின் தலைவி கூற்றினை விதந் தோதவில்லை என்று பாலசுந்தரனாரும் (ப. 104) கூறி இளம் பூரணர் மற்றும் பாரதியாரின் கருத்துகளை மறுத்துள்ளனர். இங்கு அதிகாரப் படும் பொருள் உடன்போக்கு என்னும் அருணாசலம் பிள்ளை யின் கருத்தை இந்நூற்பாவுக்கு முன்னுள்ள ஓதல் முதலான பிற பிரிவுகளைப் பற்றிய தலைமகன் கூற்றுகளே வலுவிழக்கச் செய்வ தாலும், விதந்தோதப்பட்ட கண்டோர்க்குரிய கூற்றுகளுக்கு ஏழு சான்றுகள் காட்டும் பாலசுந்தரனார், இந்த நூற்பாவில் தலைவிக் குரிய கூற்றுகளுக்கு ஆறு சான்றுகள் காட்டுவதாலும், இளம் பூரணர் தலைவி கூற்றுக்கு உரியனவாகப் பதினான்கு இலக்கியச் சான்றுகள் தருவதாலும், தலைவிக்குரிய பொதுக்கிளவிகள் அரியன என்னும் பாலசுந்தரனாரின் கருத்தும் வலுவற்றுப் போவதாலும், இவ் இரு வரின் வாதங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியனவாக அமையவில்லை.

இனிப் புறத்திணை இயலின் முதற்கண் அமைந்துள்ள,

> **அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்**
> **புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்**
> **வெட்சி தானே குறிஞ்சியது புறனே**
> **உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே.**

எனவரும் நூற்பாவும் சிதைவுற்றிருக்கலாமோ என்னும் ஐயம் தோன்றுகிறது. ஓர் இயலின் தலைச் சூத்திரம் அவ் இயலின் பொருண்மை பற்றிய விளக்கம் அல்லது வரையறை, வகை அல்லது பாகுபாடு போன்றவற்றைத் தரும் மரபினது என்பதைக் களவியல், கற்பியல், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல் என்னும் இயல்களின் முதற் சூத்திரங்களால் அறியலாம். இந்த நூற்பாவில் புறத்திணையின் வரையறையோ, பாகுபாடோ தரப்படவில்லை. மாறாக, எடுத்த உடனே வெட்சி குறிஞ்சியது புறன் என்றும் அதன் துறைகள் இத்துணையென்றும் நூற்பா கூறுகிறது. மேலும் வஞ்சி முதலாகிய பிற புறத்திணைகளைக் கூறுமிடத்து, அவை புறனாகும் அகத்திணைகளைக் குறிப்பிட்டு, அவ்வத்திணைகளின் ஒழுக லாற்றை வரையறுத்துப் பின்னர்த் துறை வகைகளைத் தொகுத்துக் கூறும் மரபு காணப்படுகிறது. இங்கு மட்டும் முதலில் வெட்சி குறிஞ்சிக்குப் புறன் என்றும், துறை பதினான்கு என்றும் கூறி அடுத்த நூற்பாவில் வெட்சியின் ஒழுகலாற்றைக் குறிப்பிடுவது நூல் செல்லும் நெறிக்குச் சற்று முரணாக இருப்பதைக் காண்கிறோம். (காண்க. சூ. 59, அடிக். 3).

மூல பாடத்தில் நேர்ந்துள்ள இச்சிக்கலை முதலில் உணர்ந்து விடுவிக்க முயன்றவர் பி.சா.சு. சாஸ்திரியார். புறத்திணை இயலின் முதற் சூத்திரத்தின் முதல் இரண்டு அடிகளுக்குப் பின்னர்ச் சிதைவு ஏற்பட்டது என்றும், அடுத்த சூத்திரத்தின் பகுதியை இதன் மூன்றாம், நான்காம் அடிகளாக வைத்து இரண்டையும் ஒரே சூத்திரமாக ஏடெழுதுவோரால் பின்னப்பட்டுள்ளது என்றும் அவர் கருதுகிறார். முதல் நூற்பா எவ்வாறு இருந்திருக்கலாம் என ஊகித்துச் சாஸ்திரியார் நூற்பாவின் மூன்றாம், நான்காம் அடிகளைக் கீழ்வருமாறு மீட்டுருவாக்கம் செய்கிறார்:

★ வெட்சி முதலாப் பாடாண் இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப

தற்போதுள்ள இறுதி இரண்டடிகளை அடுத்த நூற்பாவாக ஆக்குகிறார். அகத்திணை இயல் முதற் சூத்திரத்தின் சாயலை இங்குக் காணலாம்.

தொல்காப்பிய உரைவள ஆசிரியராகிய சிவலிங்கனாரும் இச்சிக்கலை உணர்ந்து,

அகத்திணையியலில் ... கூறியது போலப் புறத்திணையியல் தொடக்கத்தில்,

★ வெட்சி முதலாக் காஞ்சி யிறுவாய்ப்
பிற்படக் கிளந்த எழுதிணை என்ப.

என்று கூறியிருத்தல் வேண்டும்.

என்று கூறுகிறார். அகத்திணையியல் நூற்பாவைப் பின்பற்றிச் சாஸ்திரியார் 'முற்படக்கிளந்த' என்று கூற, உரையாசிரியர் மரபினை ஒட்டிப், 'பிற்படக் கிளந்த' என்று சிவலிங்கனார் மீட்டுருவாக்கம் செய்கிறார். ஆயின் பாடாண் திணையை இறுதியாகக் கொள்ளாமல், ''காஞ்சி யிறுவாய்'' என்று கூறியது ஏன் என்று விளங்கவில்லை.

மேலே சுட்டிய இடங்களில் எல்லாம் மூலபாடம் சிதைய வில்லை எனக் கருதும் பாலசுந்தரனார், ''வெறியறி சிறப்பின் வெவ் வாய் வேலன்'' எனத் தொடங்கும் புறத்திணைச் சூத்திரத்தை அடுத்து,

''★ பொருதலைக் கருதிய புறத்திணை மருங்கின்
மரபொடு வருஉம் துறையு மாருளவே

என்றாங்கு ஒரு சூத்திரம் இருந்து மறைந்தது போலும் என ஐயுற வேண்டியுள்ளது'' (ப. 142) என்று கூறுவதை நோக்கப் பாடச் சிதைவுகள் பொருளதிகார ஏட்டில் ஏற்பட்டுள்ளன என்னும் கருத்தை அவரும் ஏற்றுக் கொள்கிறார் என அறிகிறோம். இத்தகைய நூற்பா ஒன்று இருந்து மறைந்தது போலும் என்னும் பால சுந்தரனாரின் ஊகத்தைத் தி.வே. கோபாலையர் 'தக்கது' என்று கூறி ஏற்றுக் கொள்வதும் குறிப்பிடத்தக்கது. (ஆய்வு முன்னுரை, ப. xxx.)

நூற்பாக்களின் முறைவைப்பு

பாடச் சிதைவுகளைப் போன்று நூற்பாக்களின் முறை வைப்பும் பொருள் காண்பதில் சிக்கல்களைத் தோற்றுவிக்கக் காண்கிறோம். சில நூற்பாக்கள் தம்மளவில் பொருள் உணர்த்தாமல் தம் முறைவைப்புச் சூழலுக்கேற்பப் பொருள் உணர்த்தும் பாங்கில் அமைந்துள்ளன. காட்டாகக்,

கலந்த பொழுதும் காட்சியும் அன்ன. (18)

ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும் **அன்னர்**. (26)

மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப. (32)
பொருள் வயின் பிரிதலும் **அவர் வயின்** உரித்தே. (35)

எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே (45)
முன்னைய நான்கும் **முன்னதற்கு** என்ப (55)

என வரும் அகத்திணையியல் நூற்பாக்களைச் சுட்டலாம். இந் நூற்பாக்களை இடம் மாற்றி அமைத்தால் அவை கருதும் பொருள் மாறும் என்பது வெளிப்படை. முதல் உரையாசிரியராகிய இளம் பூரணர் தம் உரையில் இம்முறைவைப்பு குறித்து எதுவும் கூறாமை யின் பின்னர் வந்த உரையாசிரியர்களும் தற்போதுள்ள முறை வைப்பினை ஐயுறாமல் தத்தமக்குச் சரியெனத் தோன்றியவாறு உரைகண்டு தம்முள் முரண்படுவாராயினர்.

இத்தகைய மூலபாடச் சிக்கலைக் குறித்து அறிஞர்கள் முன்னரே சிந்தித்துள்ளனர். குறிப்பாக, மு. அருணாசலம் பிள்ளை யவர்கள் தம்முடைய உரைவளப் பதிப்பில் கூறுவது சிந்திக்கத் தக்கது:

> ஆசிரியர் நூல் செய்து ஏறத்தாழ ஆயிரத்தைந்நூறு ஆண்டுகள் கழிந்த பின்னரே, இளம் பூரணர் முதலானோர் இந்நூலுக்கு உரையெழுத முற்பட்டனர். இவர்களுக்கு முன்னர் இந்நூலைக் கற்றோரும், கற்பித்தோரும், கையால் எழுதினோரும் ஆக எத்துணையோ ஆயிரவர் இருந்தனராதல் வேண்டும். அவ் விடைக் காலங்களில் தொல்காப்பிய நூற்பாக்களில் என்னென்ன

> மாற்றங்கள் நேர்ந்தனவென்று முழுதும் நம்மால் இப்பொழுது அறிய முடியவில்லை என்றாலும் உரையாசிரியர் காலத்திற்கு முன்பே சில பல நூற்பாக்கள் இடம் மாறியெழுதப்பட்டும் கோக்கப்பட்டுமிருந்தனவென்று எண்ண இடமிருக்கின்றது. அங்ஙனம் இடமாற்றம் பெற்ற நூற்பாக்களில், 'இருவகைப் பிரிவும்'' என்ற இந்நூற்பா முதல், 'முதலெனப் படுவது ஆயிரு வகைத்தே' என்ற நூற்பா வரையுள்ள ஏழு நூற்பாக்களும் அடங்கும். களவியல், கற்பியல்களிலும் இவ்வாறு இடமாற்றம் பெற்ற நூற்பாக்கள் சில உள்ளன....
>
> மாற்றி எழுதப்பட்டும் கோக்கப்பட்டும் ஏட்டில் இருந்தவாறே இளம்பூரணர் முதலானோர் உரையெழுதத் தொடங்கியமையால், ஆற்றொழுக்காக ஆசிரியர் அமைத்திருந்த நூற்பாக்களுக்கு இடர்ப்பட்டுப் பொருள் கூற வேண்டிய இன்றியமையாமை நேர்ந்தது... முன்னைய நூற்பாக்களோடு தொடர்பு படுத்திப் பொருள் கூறுதற்கேற்ப இவ்விடத்தில் இருக்க வேண்டிய இந்நூற்பா பதினேழாம் நூற்பாவாக ஏடுகளில் இருந்தமை கண்ட உரையாசிரியர்கள், இஃது இவ்விடத்தில் இருத்தற்கு யாதும் இயைபில்லையே என உணர்ந்து வைத்தும், ஏதோ ஒவ்வொரு வகையில் இயையும் பொருளும் கூறுவாராயினர்... அவையெல்லாம் ஆசிரியர் ஆற்றொழுக்காகத் தொடர்பு படுத்தி நூற்பாக்கள் அமைத்திருக்கும் முறைமைக்கு ஏற்றவையாகா. ஆகலின் இந்நூற்பா இவ்விடத்தில் இருத்தலே பொருத்தமாகும் (**அகத்திணையியல்**, பக. 138 - 140).

பொருளதிகாரம் பல இடங்களில் பலவகையான சிதைவுகளுக்கு உட்பட நேர்ந்துள்ளது என்பதும் அதன் காரணமாகப் பல நூற்பாக்களுக்கு உரிய பொருள் காண்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்பதும் மேற்காட்டிய ஆய்வுரையால் விளக்கமடைகின்றன. இதில் வியப்பென்னவென்றால் ச.சோ. பாரதியார் சில இடங்களில் பாடம் விடுபட்டும் சிதைந்தும் இருக்கலாம் என்று கூறுவதைக் கருத்தளவிலேனும் வாங்கிக் கொள்ள மறுக்கும் அருணாசலம் பிள்ளையவர்கள், ''இவ்விடத்தில் **இருக்க வேண்டிய** நூற்பா,'' என்றும், ''இந்நூற்பா இவ்விடத்தில் **இருத்தலே** பொருத்தமாகும்'' என்றும் வலியுறுத்திக் கூறுவதுதான். இங்கு இவர் குறிப்பிடும் முறையில்

தான் தொல்காப்பியர் தம் நூற்பாக்களை அமைத்திருந்தாரா என்பதை நாம் உறுதிப்படுத்த இயலாது. வேறு வகையாகவும் அடைவுபடுத்த வேறொருவர் முயலலாம். எனவே அகத்திணையியலைப் பொறுத்த வரையில் தற்போதுள்ள முறைவைப்பு சில இடங்களில் ஆசிரியரின் கருத்தோட்டத்திற்கும், கருத்து வேறுபாடில்லாத பொருள் காணப தற்கும் ஏற்ப அமையவில்லை என்பதே இங்குக் குறிப்பிட விரும்பும் செய்தியாகும்.

இளம்பூரணர் உரையில் சிதைவுகள்

மூலத்திற்குக் கண்ட முதலுரை என்பதாலும், வேற்றுவரவால் மிகுதியாகப் பாதிக்கப்படாதது என்பதாலும் பொருள் காணபதற் குரிய நேரிய உரை என்று கருதிப் பின்பற்றிய இளம்பூரணர் உரை யும் பல இடங்களில் சிதைவுற்று இருக்கக் காண்கிறோம். பெயர்த் தெழுதுவார் விழ எழுதினார் போலும் என்று தொல்காப்பிய மூலத்தைப் பற்றிக் கருத்துரைத்த இளம்பூரணர், தம் உரையும் காலப் போக்கில் இவ்வாறு சிதைவுறலாம் என்று குறிப்பாகக் கூறுகிறாரோ என்னவோ தெரியவில்லை. இவரது உரையின் தற்போதைய நிலைக் குச் சில சான்றுகள்:

1. 98 ஆம் சூத்திரவுரையில் 'நன்னய முரைத்தல்' என்பதன் கீழுள்ள 'சேரல் மடவன்னம்' என்ற செய்யுளின் இறுதி அடியிலிருந்து 99ஆம் சூத்திரவுரையில் 'பெற்ற வழி மகிழ்ச்சியும்' என்பதன் கீழுள்ள 'நீங்கிற் றெறூஉம்' என் னும் செய்யுள் வரையும் காணும் பகுதி **ஏட்டுப் பிரதியிற் காணப்பெறவில்லை;** காலஞ்சென்ற த.மு. சொர்ணம் பிள்ளையவர்களுடைய கடிதப் பிரதியில் மாத்திரம் இருந் தது; நச்சினார்க்கினியரது உரையினின்றும் எடுத்துச் சேர்க்கப் பட்டுள்ளது எனக் கருதுவதற்கு இடமுண்டு.

   இதன் பின்னர் 'ஒடுங்கீரோதி' என்பதிலிருந்து 100 ஆம் சூத்திரவுரை முடியவுள்ள பகுதியிற் **பெரும்பாலும்** ஏட்டுப் பிரதியிற் பலவாறாகப் **பிறழ்ந்து காணப்படுகிறது**. இது பொருள் தொடர்பு நோக்கி **ஒருவாறு செப்பஞ் செய்யப் பெற்றுள்ளது**. (கழகப் பதிப்பு 1956, அடிக்குறிப்பு, பக்கம் 75).

2. இங்கிருந்து 1 3/4 பக்கம் ஏட்டில் எழுதப் பெறாது **விடப் பட்டுள்ளது.** 'புணர்ந்துடன் போகிய' என்ற சூத்திரமும், 'பெறற்கரும்' என்ற சூத்திரமும் அதன் முதலிரண்டு அடி களின் உரையும் **மறைந்து விட்டன போலும்.** இப்பகுதிக்கு நச்சினார்க்கினியரைத் தழுவி உரையெழுதி (இ.மு.சோ) **சேர்த்திருக்கின்றனர்.** இங்கே தரப்படுவது அவ்வாறு சேர்க்கப்பெற்றதேயாம். 'குற்றமில்லாத் தலைமைகளைச் சுட்டிய தெய்வக் கடன் கொடுக்கவேண்டுமென்றலாம்' என்பது தொடங்கியேட்டுப் பிரதியிற் காணப்படுகின்றது. (மு. நூல். அடிக். ப. 282).

3. முற்குறிப்பிட்ட கழகப்பதிப்பில் பக்கங்கள் 176, 177, 179 போன்று பல இடங்களில் இத்தகைய குறிப்புகள் காணப் படுகின்றன.

இத்தகைய அடிக்குறிப்புகளைப் பொறுப்போடு தந்துதவிய சைவ சித்தாந்தக் கழகம் பாராட்டுக்குரியது. இளம்பூரணர் கொண்ட தொல்காப்பியப் பாடமும் அவரது உரையும் பல இடங்களில் நச்சி னார்க்கினியரின் பாடமும் உரையுமாக அமைந்துள்ள உண்மையை அறிய இந்தக் குறிப்புகள் பெரிதும் உதவுகின்றன.

4. ... இதற்குப் பொருள் கூறுதலில் இடர்ப்பாடு நேர்ந்தது. அதனால் இந்நூற்பாவிற்குப் (கலந்த பொழுதும் காட்சியும் அன்ன) பதவுரை கூறாது விடுத்தனர். (இளம்பூரணர்) வ.உ.சி. பதவுரையமைத்து அஃது இளம்பூரணர் எழுதிய குறிப்புக்களைக் கொண்டு தாமே அமைத்தது என்பதனை யறிவித்தற்கு அதனை இருதலைப்பகரத்துள் அடக்கிக் காட்டினர். பின்னர் வந்த பதிப்புக்களில் அவ்விருதலைப் பகரம் எடுக்கப்பட்டமையின் அவ்வுரையும் இளம் பூரணர் எழுதியதே என்றெண்ணுமாறுள்ளது. இதுபோல்வன வற்றைப் பின்னர்ப் பலவிடங்களிலும் காணலாம். (அகத்திணையியல், ப. 198)

மு. அருணாசலம் பிள்ளையவர்களின் இக்குறிப்பை நோக்க, இளம்பூரணரின் உரையாகத் தற்போது நமக்குக் கிடைத்திருப்பதில் பிற்காலத்தவரால் எழுதிச் சேர்க்கப் பெற்ற பகுதிகளும் அடங்கி

யுள்ளன என்னும் உண்மை புலப்படுகிறது. இனி, பொருள் கூறு வதில் இளம்பூரணர்க்கு இடர்ப்பாடு நேர்ந்தது. அதனால் இந்நூற் பாவிற்குப் பதவுரை கூறாது விடுத்தனர் என்னும் மேலைய கூற்று இளம்பூரணர் பதவுரை கூறாத நூற்பாக்களுக்கு எல்லாம் (காட்டாக, நூற்பா, 101, 102, 103, 106, 107, 108) பொருந்துமா என்பதும், அவர் உரையில் காணப்பெறும் பதவுரைகள் எல்லாம் அவருடை யவை தாமா என்பதும், பிற்காலத்தே பதவுரை எழுதிச் சேர்த்தவர்கள் மேலே சுட்டிய நூற்பாக்களுக்கும் ஏன் பதவுரை எழுதிச் சேர்க்க வில்லை என்பதும் நம் சிந்தனைக்குரியனவாக் அமைகின்றன.

இளம்பூரணரின் உரையைத் தழுவியே இந்த மொழிபெயர்ப் பில் கருத்துரை தரப்பட்டுள்ளது. எனினும் மேலே சுட்டிய சிதைவு களின் காரணமாகச் சில இடங்களில், இளம்பூரணரின் உரை பொருத்தமாகக் காணப்படாததால் பிறருடைய உரைகளில் பொருத்தமானவை என்று கருதப்பட்டவை தரப்பட்டுள்ளன. சான் றாக நூற்பாக்கள் 63,77,83 ஆகியவற்றுக்குத் தரப்பட்டுள்ள உரையையும் அவற்றிற்குரிய அடிக்குறிப்புகளையும் சுட்டலாம்.

தற்போதுள்ள உரைகளில் எதுவும் நூற்கருத்தோடும் தொல் காப்பியர் கால இலக்கியச் சூழலோடும் பொருந்தவில்லை என்று கருதிய நிலையில் இம்மொழிபெயர்ப்பாளரின் புதிய உரையும் அறிஞர்களின் சிந்தனைக்காக அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளது. சான்றாக, நூற்பா 82 ஐயும் அதற்குரிய 39ஆம் அடிக்குறிப்பையும் குறிப்பிடலாம். தற்போதுள்ள முறைவைப்பின் அடிப்படையில் உரையாசிரியர்கள் உரை காண்கின்றனர் என்பதற்கும் முறை வைப்பு மாற்றப்பட்டால் உரையும் மாறும் என்பதற்கும் இதுவு மோர் (நூ. 82) சான்றாக அமைகிறது.

உரை காண முடியாத தனிச் சொற்களும், தொகைச் சொற்களும்

தனிச்சொற்கள் : பாடச் சிதைவுகள், பாட வேறுபாடுகள், உரை வேறுபாடுகள் தவிரச் சில தனிச் சொற்களும், தொகைச் சொற்களும் கூட மூல பாடப் பொருளை உணர்ந்து கொள்வதில் சிக்கலை விளைவிக்கின்றன. சான்றாகச் சிலவற்றைப் பார்க்கலாம்:

மொழிபெயர்ப்புச் சிக்கல்கள்

மூலபாடக் கருத்தை உணர்ந்து கொண்ட பின்னர் அதனை வேறு மொழியில் கூறுமிடத்துத் தோன்றும் சிக்கலை மொழி பெயர்ப்புச் சிக்கல் என்று கூறுகிறோம். தொல்காப்பியப் பொரு ளதிகார மொழிபெயர்ப்பைப் பொறுத்தவரையில் மூலபாடப் பொருளை உணர்ந்து கொள்வதைவிடக் குறைவான சிக்கல்களே அதனை மொழிபெயர்ப்பதில் தோன்றுகின்றன எனலாம். இலக் கியப் புலத்தோடு தொடர்புடையதாயினும், பொருளதிகாரம் ஓர் இலக்கண நூலாதலின் கற்பனை, அணிகள், இறைச்சி போன்ற வெளிப்பாட்டு உத்திகள் என்னும் முருகியல் சார்ந்த பகுதிகள் இதில் இடம்பெறவில்லை. ஒரு பழமையான பண்பாட்டின் இலக்கிய மரபுகளை விளக்கிச் செல்லும் பாங்கில், இலக்கணம், இலக்கியம், சமுதாய வழக்காறுகள், பண்பாட்டு மரபு ஆகியன பற்றிய கலைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நூல் கூறக் கருதுவது இலக் கியம் பற்றிய கோட்பாடுகள். எனவே புறவயப்பட்ட கருத்துகளும், பண்பாட்டுச்சிறப்புடைய சொற்களும், கலைச்சொற்களும்தான் இங்கு மொழிபெயர்க்கப்பட வேண்டியவை.

மொழிபெயர்ப்புப் பொதுமை (translation equivalence) கொண்ட சொற்களை அதாவது கருத்தும் சொல்லும் இருமொழி யிலும் காணப்படும் தன்மையுடைய சொற்களை மொழிபெயர்ப் பதில் சிக்கல்கள் தோன்றுவதில்லை. மொழி பெயர்ப்பாளனுக்கு இருமொழிப் புலமை நிரம்பியிருந்தால் போதும். ஆனால் பண் பாட்டுச் சிறப்புடைய கருத்துகள் மற்றும் கலைச் சொற்களை மொழிபெயர்க்குமிடத்துச் சிக்கல்கள் தோன்றும். இது போன்ற சிக்கல்கள் இந்த மொழிபெயர்ப்பின் கண்ணும் தோன்றின.

அகம், புறம் என்னும் இலக்கியப் பாகுபாட்டுச் சொற்கள், கைக்கிளை முதலிய திணைப் பெயர்கள், முதுகாஞ்சி மூதானந்தம் போன்ற துறைப் பெயர்கள், முதல், கரு, உரி என்னும் திணை புலப்பாட்டுச் சொற்கள், கலிப்பா, பரிபாடல் போன்ற யாப்பு வடிவங்களைக் குறிக்கும் சொற்கள் போன்றவற்றை நேரடியாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க இயலவில்லை. பொதுத்தன்மை இன்மையால் இத்தகைய பண்பாட்டுச் சொற்கள் (culture specific terms) ஒலிபெயர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஒலிபெயர்த்துக்

எல்லா உரையாசிரியர்களும் பேரார்வத்துடன் விளக்கிச் செல்கின்றனர். அவ்விளக்கங்கள் எல்லாம் அவை முதல், கரு, உரிப்பொருள்களால் எவ்வாறு ஒத்த தன்மையினவாய் அமைகின்றன என்று மட்டுமே கூறுகின்றன. முதல் கரு, உரி என்னும் பாடல் அமைப்பு முறை அகத்திணைக்கு மட்டுமே ஓதப்பட்டது என்பது இங்கே நினைவு கூரத் தக்கது.

இந்தச் சமன்பாடு அல்லது வாய்பாடு, அதாவது, 'இதற்கு இது புறன்' என்னும் இலக்கண வரையறை, மறுதலித்து மொழியுங்கால் (அத்தகையதொரு இலக்கண மரபு இல்லை) - அதாவது,

★ குறிஞ்சி தானே வெட்சியது அகனே.

★ பாலை தானே வாகையது அகனே.

எனக் கூறினால், இதே கருத்தீட்டை அல்லது கோட்பாட்டை உட்கொண்டதாக அமையுமா என்னும் வினா (ஐயமோ, அறியாமையோ) எழுகிறது. இணையானவை என்று உரைகாரர்களால் விளக்கப்படுவதால் இத்தகைய வினா எழுகிறது. தொல்காப்பியமும் வாளா புறனே என்று கூறுகிறதேயன்றி, புறனாதல் என்றால் என்ன என்றோ, எவ்வாறு என்றோ கூறவில்லை. எனவே இக்கருத்தீட்டின் கோட்பாட்டு நுட்பத்தை உணர இயலவில்லை.

மேலும், ''அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்'' என்று கூறி அகத்திணை மரபைத் தமது புறத்திணைக் கோட்பாட்டிற்கு அடித்தளமாக வகுத்துக் கொள்ளும் தொல்காப்பியர், ''கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்'' என நிறுத்திய வகையில் புறத்திணைகளைக் கூறாமல், வெட்சி முதலாகிய புறத்திணைகளை அடியாக நிறுத்திக் கூறுவானேன் என்னும் வினாவும் எழுகிறது. அதிகாரப்படும் பொருள் புறப்பொருளாதலின், புறப்பொருள் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியைக் கருத்தில் கொண்டு, வெட்சி, வஞ்சி என நிரல்படுத்திக் கூறுவதுதான் பொருத்தமானது என்பதில் ஐயமில்லை. எனினும், பொருளதிகாரம் காட்டும் திணை அடைவு வெட்சி முதல்-வாகை ஈறான ஐந்தனது பொருண்மைக்கு மட்டுமே பொருந்துவதாகத் தோன்றுகிறது. காஞ்சி, பாடாண் என்பன முன் பின்னாக மாறியிருப்பினும் முரண்பாடு எதுவும் விளையும் என்று

தோன்றவில்லை. எனவே பலர் செலச் செல்லாப் பெருமையுடைய நிலையாமையை விளக்கும் காஞ்சித் திணையை ஏழாவதாக வைத்திருப்பின் பெரிதும் பொருத்தமாக இருக்கும் என்று யதார்த்த நிலைப் பார்வையில் கருதுவதும் கூடும். ஆகப் புறத்திணை அடைவும் அவற்றிற்குரியனவாகக் கூறப்படும் அகத்திணை அடைவும் இதற்கு முன்னர்க் கூறியுள்ள (நூ. 1,5,11) முறைவைப்புகளோடு ஐயத்திற்கு இடமின்றிப் பொருந்துவனவாகத் தோன்றவில்லை.

புறத்திணைகள் பன்னிரண்டு என்னும் கோட்பாடு ஒன்று இருந்து, அதன் பொருந்தாமை கண்டு, அதனை மறுத்துப் புறத்திணைகள் ஏழே என்னும் கோட்பாட்டை நிறுவ முனையுமிடத்து, அகத்திணைகள் ஏழு என்னும் கோட்பாட்டை அடிச்சட்டகமாகக் கொண்டு தொழிற்படும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதை இங்கே காணலாம்.

இந்த விவாதம் குறித்து அண்மையில் எழுந்துள்ள ஆய்வுக் கண்ணோட்டம் ஒன்றினைச் சற்று விரிவாகச் சுட்டுவது இங்கே கடமையாகிறது:

> பாடலை அலகாகக் கொண்டு பார்க்கும்பொழுது, அகத்திணையில் முதல், கரு, உரி தொழிற் படுவது கண்டுபிடிக்கப்பட்டுளளது... புறத்திணைப் பாடல்களுக்குஇத்தகைய ஒரு கொள்கை சுட்டப்பெறவில்லை. எனினும் பல்வேறு போர்நிலைகளும் வீரப்புகழ்ச்சி நிலைகளும் தரப்படுகின்றன.
>
> புறத்திணை பற்றிய இயலிற் காணப்படும் மிக முக்கியமான அம்சம் தொல்காப்பியம் ''புறன்'' என்பதை இனங்கண்டு கொள்ளும் முறைமையாகும். வெட்சி தானே குறிஞ்சியது புறனே (1) ... பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே (30). இவ்விடங்களிற் ''புறன்'' என்பது இயைபு காரணமாகக் கூறப்படும் ''இணை நிலைச் சேர்ப்பு'' (pairing) ஆகும். அதாவது ஒரு அகத்துக்கு ஒரு புறம் உண்டு என்பது.
>
> நில அடிப்படையைக் கொண்ட அக - புற இணைப்புக்களைப் பார்க்கும்பொழுது, ஒவ்வொரு நிலத்திலும் காணப்படக் கூடிய ஆண் - பெண் உறவுக்கான சமூகச் சூழலுக்கும் அதே நிலத்துக்

குரியதான போர் முறைகளுக்கும் ஓர் இயைபு இருப்பது இயற்கையானதே. குறிஞ்சியில் நடைமுறையிலுள்ள சமூக அதிகார ஒழுங்கு முறைகளுக்கும், வெட்சிக்குரியதான போர் முறைமைக்கும் ஓர் இயைபு காணப்படுவது உண்மையே. இது முல்லை, மருத நிலங்களுக்கும் பொருந்தும்...

பாலைக்கும் நெய்தலுக்கும் இத்தகைய ஓர் இயைபினைக் காணமுடியாதுள்ளது. நெய்தற் பிரதேசத்திலே தோன்றக்கூடிய அதிகார முறைமைக்கும் இறுதிவரை போராகும் தும்பைக்கும் தொடர்பு காண்பது சிரமம். இத்தகைய "விடாப்பிடிப்" போருக் கான வாய்ப்பு விளைச்சற் சாத்தியப்பாடுகள் அற்ற வெற்று நிலம். பாலையில் உண்டு.

வாகைபற்றித் தொல்காப்பியம் கூறுவனவற்றை நோக்கும்போது அங்கு முற்றிலும் கருத்து முதன்மையானதும் (idealistic) வாகையின் பொருளியல் யதார்த்தத்துக்கும் அப்பாலானது மான ஒரு கொள்கையாக்கமே (theorisation) காணப்படுகிறது....

இதற்கும் மேலாகக், கைக்கிளையையும் பாடாணையும், பெருந் திணையையும் காஞ்சியையும் இணைத்து நோக்குவது ஒரு முரண்நிலைப்பாட்டைக் காட்டுகின்றது. கைக்கிளை பற்றித் தொல்காப்பியம் தரும் விவரணமானது அது ஒரு திரிபு நிலப் பட்ட பாலியல் நிலை என்பதைக் காட்டும்... இதனை ஆளுமைப் பொலிவைப் பாடும் பாடாணுக்குப் புறனாகக் கொள்ளுதல் வாய்பாடு மயப்படுத்திப் பார்க்கும் ஒரு நோக் காகவே காணப்படுகின்றது. இதே போன்றதே பெருந்திணை - காஞ்சி இணைப்பும்... இதனை "நில்லா உலகம் புல்லிய நெறித்தே" எனக் காஞ்சியோடு இணைத்தல் பொருத்தமற்ற தாகவே காணப்படுகிறது....

வாகையை விவரிக்கும் பொழுது கூறும் கருத்துக்களை நோக் கும் பொழுதும் (நூற்பா. புறத் - 16) தொல்காப்பியத்திற் காணப் படும் அக - புற இணைப்புக் கொள்கையாக்கம் பொருந்தாது என்பது தெரிகிறது.

வடமொழிச் சமூக இலக்கியப் பாரம்பரியங்கள் சிலவற்றை யேனும் முற்றிலும் தமிழ்நாட்டுக்குரியனவான நடைமுறை

களிலே காணும் ஒரு நோக்கினையே காஞ்சி - பெருந்திணை இணைப்பு காட்டுகின்றது.

(கார்த்திகேசு சிவத்தம்பி," தமிழ்க் கவிதை வரலாற்றில் தொல்காப்பியக் கவிதையியல் - சில வினாக்களும் சிக்கல் களும்", **தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள்**, (ப.ஆ) செ. லாரன்ஸ் மற்றும் கு. பகவதி, சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1998 பக். 70 -73.)

தொகைச் சொற்கள்

நால்வர் (31) நாலிரு வழக்கு (74) நாலிரண்டு (78), நான்கு (55) அறுவகை (79). எட்டுவகை (75) என்னும் தொகைச் சொற் களுக்குப் பொருள் காண்பதிலும் உரைகாரரிடையே கருத்து வேறு பாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இந்த நூற்பாக்களுக் குரிய அடிக்குறிப்புகளில் இவ் வேறுபாடுகள் விரிவாக ஆராயப் பெறுகின்றன. கால இடைவெளியாலும், பண்பாட்டுக் கலப்பினால் ஏற்பட்ட மாற்றங்களாலும், தொல்காப்பியர் காலச் சமுதாய மரபுகள், வழக்குகள் ஆகியவற்றை இன்று நாம் அறிய உதவத் தக்க குறிப்புகளோ, வரலாற்றுத் தன்மைபெற்ற நூல்களோ இல் லாமையாலும், இது போன்ற தொகைச் சொற்களுக்குப் பொருள் காண்பதில் ஒருமித்த கருத்து தோன்ற வழியில்லாமற் போயிற்று. மிகவும் தொன்மை வாய்ந்த நூல்களிற் பயிலும் சொற்கள் சில வற்றிற்குப் பொருள் காண்பதில் கருத்துவேறுபாடுகள் தோன்று வதைப் பழமைசான்ற கிரேக்கம் முதலான மொழிகளிலும் காண் கிறோம். அரிஸ்டாடிலின் கவிதையியலில் வழங்கும் 'கெதார்சிஸ்', 'அமார்ஷியா', 'ஆக்ஷன்' என்னும் சொற்களுக்குப் பொருள் காண்பதில் சென்ற நூற்றைம்பது ஆண்டுகளாக இருந்துவரும் கருத்து வேறுபாடுகள் இன்னும் தீர்ந்த பாடில்லை என்னும் செய் தியை இங்கே நினைந்து பார்ப்பது நல்லது.

இவ்வாறு கருத்து வேறுபாடுகள் மலிந்த இடங்களிலெல்லாம் எந்த ஓர் உரையாசிரியரையும் தொடர்ந்து பின்பற்றாமல், நூற்பாவின் சூழலுக்கு ஏற்றது என்று இந்த மொழிபெயர்ப்பாளன் இன்றைய அறிவுநிலையில் கருதும் பொருள் கருத்துரையாகவும், மொழி

பெயர்ப்பாகவும் தரப்பட்டுள்ளது. தக்க புறவயத் தரவுகள் எதிர் காலத்தே கிடைக்கும் வாய்ப்பு ஏற்படின், அறிதோறும் அறியாமை கண்டற்றால் என்னும் வாய்மொழிக்கிணங்க பிறிதொரு பொருள் கொள்ளவும் கூடும்.

சில சங்கடமான சொல்லாட்சிகள்

மூலபாடப் பொருளை உணர்ந்து கொள்வதில் சிக்கலை விளைவிக்காவிடினும், பொருளதிகாரத்தில் ஆளப்பட்டுள்ள சில சொற்கள் வழக்காற்றுச் சிக்கலை உண்டுபண்ணுவனவாய் அமைந்துள்ளன. அவற்றுள் முக்கியமாகப் பெரியவர் (75), தாபதப்பக்கம் (74), தாபத நிலை (77), மூதானந்தம் (77), தபுதார நிலை (77) என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

பெரியவர்

'பெரியவர்' என்னும் சொல் தொல்காப்பியத்தில் ஓர் இடத்தில் (75) மட்டும் வந்துள்ளது. இங்கே இச் சொல் உயர்திணைப் பன்மையாகக் (பலர்பால்) கையாளப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்துள் நற்றிணையில் மட்டும் ஒரே இடத்தில் (266) வரும் இச்சொல் உயர்வுப் பன்மையாக ஆளப்பட்டுள்ளது. அதன்பின்னர் நாலடியாரில்தான் 'பெரியவர்' என்னும் சொல் 'பலர் பாலாக' வழங்குகிறது. குறிப்பு வினையாலணையும் பெயர்கள் வகர மெய் பெற்று வழங்குதல் தொல்காப்பியர்கால மொழிவழக்கிற்கு உரியதுதானா என்பது நுட்பமாக ஆராயத் தக்கது.

தாபதப் பக்கம், தாபத நிலை

இத் துறைகள் கருதும் புறத்துறைப் பொருண்மைக்கு உரியனவாகப் பல பாடல்கள் புறநானூற்றில் (248 - 252) கோக்கப் பட்டுள்ளன. நிகழ்ச்சி தமிழ்ப் பண்பாட்டிற்கு உரியதாக இருக்க, இதனைக் குறிக்கும் கலைச்சொல் மட்டும் பிறமொழி கலந்த தொகை நிலையாக உருவானது எவ்வாறு, எப்போது என்னும் வினாக்கள் எழுகின்றன. சங்க இலக்கியத்துள் எங்கும் தாபதன், தாபதர் என்னும் சொற்கள் வழங்கியதாகத் தெரியவில்லை. முதன் முதலாகச்

சிலப்பதிகாரத்தில்தான் (26 : 9, 27 : 179) இவை வழங்குகின்றன. கீழ்க்கணக்கு நூல்களிலும் இச்சொற்கள் காணப்படவில்லை.

மூதானந்தம்

'மூதானந்தம்' என்னும் சொல்வழக்கு தொல்காப்பியத்துள் ஓர் இடத்தில் மட்டும் காணப்படுகிறது. தொகையாக வழங்கும் இக் கலைச்சொல் தமிழ் இலக்கிய வரலாற்றில் பிற்காலச் சோழர் காலத்திற்கு முன்பு வழங்கியதாகத் தெரியவில்லை. இச்சொல் கருதும் பொருளுக்குரிய நிகழ்ச்சி (கணவன் இறந்ததும் மனைவி உட னுயிர்துறத்தல்) சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றிருந்தும் இக் கலைச்சொல்லின் வழக்கு இலக்கியத்திலோ, இலக்கணத்திலோ இடம்பெறாமையும் சிந்திக்கத் தக்கது. இளம்பூரணரும் நச்சினார்க் கினியரும் இத்துறைக்குப் பு.வெ. மாலைச் செய்யுளை எடுத் துக்காட்டாகத் தருகின்றனர். இக்கால உரைகாரருள் சோம. இள வரசு மட்டும் சிலப்பதிகாரப் பகுதியை (காதை 20) எடுத்துக்காட் டாகத் தருகிறார். பாலசுந்தரனார் சிலப்பதிகாரச் செய்தியைச் சுட்டுவதோடு அமைந்து, பு.வெ. மாலைச் செய்யுள்ளயே காட் டாகத் தருகிறார்.

இத்தொகையின் பிற்கூறாகிய ஆனந்தம் என்னும் சொல் திருவாசகத்தில் முதன் முதலாக இடம்பெற்றுள்ளது. ஆனந்தம் என்பதை முற்கூறாக்கிப் பையுள் என்னும் தமிழ்ச் சொல்லோடு சேர்த்துத் தொகையாக ஆனந்தப்பையுள் என்னும் துறையைப் பு.வெ. மாலை காட்டுகிறது. இத்துறை மூதானந்தம் என்னும் துறையினின்று வேறுபட்டது.

தமிழும் வடமொழியுமாகத் தொக்குவரும் சொல்மரபு தமிழ் மொழியில் எக்காலத்தில் தோன்றியது என்று கணிப்பதற் குரிய தரவுகள் இப்போது நம்மிடையே இல்லை. செய்யுட்கு உரியனவாக வடசொற்கள் தமிழில் இடம் பெறலாம் என்று இலக் கணம் வகுத்த தொல்காப்பியர் இத்தகைய கலப்புத் தொகை நிலைகள் (hybrid compounds) பற்றி எதுவும் கூறவில்லை. தபுதாரம் என்பதும் இவ்வாறு அமைந்த மற்றொரு தொகைநிலை. தாரம் தபுநிலை என்றிருக்கற்பாலது தபுதார நிலைஎன முன்பின்

னாகத் தொக்குநின்றது என்று விளக்கம் கூறும் பாலசுந்தரனாரும் சோம. இளவரசும் இருமொழித் தொகைநிலையின் அமைப்பு **(structure)** குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. மேலும் முன் பின்னாகத் தொக்கு வருவது (முன்றில் போல) தமிழ் மொழிக்குக் கூறப்பட்ட இலக்கணம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தபுதார நிலை

தொல்காப்பியத்துள் ஒரேயொரு இடத்தில் மட்டும் வழங்கும் மற்றொரு சொல் தபுதார நிலை (77) என்பதாகும். மூதானந்தம் என்னும் சொல்லைப் போன்றே இதுவும் தமிழ் - வடமொழித் தொகைநிலையாக ஆளப்பட்டுள்ளது. இதில் வரும் தாரம் என்னும் சொல் 'மனைவி' என்னும் பொருளில் இங்கு வழங்குகிறது. இச் சொல் சங்க இலக்கியத்துள் மிகப் பரவலாக வழங்குகிறது.

பெரும். 361; மதுரைக். 290,697; மலை. 170,513;
நற். 135; பதிற். 48,88; பரி. 12; அகம். 171, 282;
புறம் - 343.

மேற்குறித்த இடங்களிலெல்லாம் இச் சொல் பொருள், பண்டம், அரிய பொருள் என்னும் பொருள்களில் பயன்படுத்தப்பெற்றுள் ளது. சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் (3 : 72, 76; 6 : 153; 10 : 106; 10 கட்டுரை - 15; 17 : 48,53) பயின்றுவரும் இச் சொல் இசை நரம்பு, யாழ் நரம்பு, யாழிசை வகை என்னும் பொருள்களில் வழங்கக் காண்கிறோம். ஆகச் சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் என்னும் இருதிறத்து இலக்கியங்களிலும் பரந்து வழங்கும் இச் சொல் 'மனைவி' என்ற பொருளில் எங்குமே ஆளப்படவில்லை.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் சிலவற்றில்தான் தாரம் என்னும் சொல் முதன் முதலாக 'மனைவி' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது (நாலடி. 81,82; ஆ. கோவை. 95; சிறு பஞ்ச. 81; முதுமொழிக். 41,42).

நாலடியாருக்கு மிக விரிவாகவும் ஆழமாகவும் விரிவுரை எழுதியுள்ள செம்பூர் வித்துவான் ஆறுமுகம் சேர்வையவர்கள், ''தாரம் - தாரா: என்னும் வடசொற்றிரிபு'' என்று குறிப்பிடுகிறார்.

(நாலடி. 81). சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி **(tamil lexicon)**, தாரம் **dāra** என்னும் சொல்லின் தமிழ்வடிவம் என்று குறித்து, மனைவி என்னும் பொருளில் தொல். பொருளதிகாரத்தில் வரும் 'தபுதார நிலை'யில் வழங்குகிறது என்று பதிவு செய்துள்ளது.

தார **(dāra)** என்னும் ஆண்பாற் பன்மைச்சொல், 'மனைவி - மனைவியர்' என்னும் பொருளுடையது என்றும், கால அடைவில் முதன் முதலாக முறையே கிருஷ்ய சூத்திரம், மனுநீதி நூல், மகா பாரதம் ஆகிய நூல்களில் இச்சொல் வழங்கியுள்ளது என்றும் மோனியர் வில்லியம்ஸ் தமது வடமொழி - ஆங்கில அகராதியில் பதிவு செய்துள்ளார்.*

எனவ தற்போதைய தரவு நிலையில், தாரம் என்னும் சொல் 'மனைவி' என்னும் பொருளில் பொருளதிகாரத்தில் வழங்கப் பட்டுள்ளது என்பதும் இப்பொருளில் இச் சொல் சங்க நூல்களிலும் சிலப்பதிகாரத்திலும் வழங்கப்படவில்லை என்பதும் தெளிவா கின்றன.

தபுதார நிலை என்னும் துறைப் பொருண்மைக்குரிய பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன; எனினும் புற நானூற்றுக்குத் திணை, துறை வகுத்தோர் தபுதார நிலை என்னும் துறையை எந்தப் பாடலுக்கும் வகுக்கவில்லை. இதனோடு தொடர் புடைய தாபத நிலை என்னும் துறையைப் புறப்பாடல்களுக்குக் காட்டியுள்ளனர். இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய இடைக் கால உரையாசிரியர்களும், இக்கால உரைகாரராகிய பாலசுந்தர னாரும் சேரமான் கோட்டம் பலத்துத் துஞ்சிய மாக்கோதை யின் ''யாங்குப்பெரிதாயினும் நோயளவு எனைத்தே'' எனத் தொடங்கும் புறப்பாடலைத் (245) தபுதார நிலை என்னும் துறைக்கு எடுத்துக் காட்டாகத் தந்துள்ளனர்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் பயன்படுத்திய புறநானூற்று ஏடுகளில் திணை, துறைகள் வகுக்கப்படவில்லையா,

---

* M. Monier - Williams, A Sanskrit - English Dictionary (Oxford University Press 1899; rpt. Delhi: Motilal Banarasidass, 1995).

அல்லது வகுக்கப்பட்டிருப்பினும் அக்குறிப்புகளை இவ் இரு உரையாசிரியர்களும் ஏற்றுக்கொள்ளவில்லையா என்னும் சிந்தனை நம் உள்ளத்தில் எழுவதைத் தடுக்க இயலவில்லை. புறப்பொருள் வெண்பா மாலையில் தபுதார நிலை என்று ஒரு துறையே குறிப்பிடப்பெறவில்லை என்பதும், ஆனால் தாபத நிலை ஒரு துறையாகக் கொள்ளப்பட்டுள்ளது என்பதும் இதன் தொடர்பில் சிந்திக்கத் தக்கனவாக அமைகின்றன. (காண்க : நூற்பா 82, அடிக் குறிப்பு 39).

மேலே இனங்காட்டிய பெரியவர், ஆனந்தம், தாரம், தாபதம் என்னும் தனிச் சொற்களுக்கும், மூதானந்தம், தபுதார நிலை, தாபத நிலை தாபதப் பக்கம் என்னும் புறப்பொருள் சார்ந்த கலைச் சொற்களுக்கும் பாடவேறுபாடுகளே இல்லை என்பதும், தொல்காப்பியத்திற்கு உடன் காலத்தனவாகச் சிலராலும், பிந்தியனவாகப் பலராலும் கருதப்படும் சங்க இலக்கியங்களில் இத் தனிச் சொற்களின் ஆட்சி காணப்பெறவில்லை என்பதும் இணைத்துச் சிந்திக்கத் தக்கன. மேலும் மூதானந்தம், தபுதார நிலை என்னும் துறைகளைப் புறப்பாடல்களுக்குத் திணை, துறை வகுத்தோர் காட்டவில்லை என்பதும் புறப்பொருள் வெண்பா மாலையில் இந்த இரு துறைகளும் குறிப்பிடப்பெறவில்லை என்பதும், ஆனால் பு.வெ. மாலை குறிப்பிடும் ஆனந்தப் பையுள் போன்ற பிற்காலத் துறைகள் பல புறநானூற்றுப் பாடல்களுக்கு வகுக்கப்பட்டுள்ளன என்பதும் இங்கே தொகுத்துச் சிந்திக்கத் தக்கன. தொல்காப்பிய மூல பாடம்பற்றிய சில ஐயங்களைத் தூண்டுவனவாகையால் இவை இங்கே சற்று விரிவாக ஆராயப்பெற்றன.

மூல பாடச் சிதைவுகள், பாடவேறுபாடுகள், நூற்பாக்களின் வைப்பு முறை, பலவாறாகப் பொருள் கொள்ள இடமளிக்கும் தனிச் சொற்கள், தொகைச் சொற்கள், உரை வேறுபாடுகள் என்னும் பல்வேறு நிலைகளில் தருமொழிப் பாடப்பொருளை உணர்ந்து கொள்வதில் எதிர்ப்பட்ட சிக்கல்கள் குறித்து இதுவரை கூறப்பட்டது. இளம்பூரணர் உரையைத் தழுவியே பெரும்பாலும் கருத்துரைகள் அமைக்கப்பட்டிருப்பினும், சில இடங்களில் பிற உரையாசிரியர்களின் உரைகளும் ஏற்றுத் தரப்பட்டுள்ளன என்பதும் விளக்கப்பட்டது.

மொழிபெயர்ப்புச் சிக்கல்கள்

மூலபாடக் கருத்தை உணர்ந்து கொண்ட பின்னர் அதனை வேறு மொழியில் கூறுமிடத்துத் தோன்றும் சிக்கலை மொழி பெயர்ப்புச் சிக்கல் என்று கூறுகிறோம். தொல்காப்பியப் பொரு ளதிகார மொழிபெயர்ப்பைப் பொறுத்தவரையில் மூலபாடப் பொருளை உணர்ந்து கொள்வதைவிடக் குறைவான சிக்கல்களே அதனை மொழிபெயர்ப்பதில் தோன்றுகின்றன எனலாம். இலக் கியப் புலத்தோடு தொடர்புடையதாயினும், பொருளதிகாரம் ஓர் இலக்கண நூலாதலின் கற்பனை, அணிகள், இறைச்சி போன்ற வெளிப்பாட்டு உத்திகள் என்னும் முருகியல் சார்ந்த பகுதிகள் இதில் இடம்பெறவில்லை. ஒரு பழமையான பண்பாட்டின் இலக்கிய மரபுகளை விளக்கிச் செல்லும் பாங்கில், இலக்கணம், இலக்கியம், சமுதாய வழக்காறுகள், பண்பாட்டு மரபு ஆகியன பற்றிய கலைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நூல் கூறக் கருதுவது இலக் கியம் பற்றிய கோட்பாடுகள். எனவே புறவயப்பட்ட கருத்துகளும், பண்பாட்டுச் சிறப்புடைய சொற்களும், கலைச்சொற்களும்தான் இங்கு மொழிபெயர்க்கப்பட வேண்டியவை.

மொழிபெயர்ப்புப் பொதுமை (translation equivalence) கொண்ட சொற்களை அதாவது கருத்தும் சொல்லும் இருமொழி யிலும் காணப்படும் தன்மையுடைய சொற்களை மொழிபெயர்ப் பதில் சிக்கல்கள் தோன்றுவதில்லை. மொழி பெயர்ப்பாளனுக்கு இருமொழிப் புலமை நிரம்பியிருந்தால் போதும். ஆனால் பண் பாட்டுச் சிறப்புடைய கருத்துகள் மற்றும் கலைச் சொற்களை மொழிபெயர்க்குமிடத்துச் சிக்கல்கள் தோன்றும். இது போன்ற சிக்கல்கள் இந்த மொழி பெயர்ப்பின் கண்ணும் தோன்றின.

அகம், புறம் என்னும் இலக்கியப் பாகுபாட்டுச் சொற்கள், கைக்கிளை முதலிய திணைப் பெயர்கள், முதுகாஞ்சி மூதானந்தம் போன்ற துறைப் பெயர்கள், முதல், கரு, உரி என்னும் திணை புலப்பாட்டுச் சொற்கள், கலிப்பா, பரிபாடல் போன்ற யாப்பு வடிவங்களைக் குறிக்கும் சொற்கள் போன்றவற்றை நேரடியாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க இயலவில்லை. பொதுத்தன்மை இன்மையால் இத்தகைய பண்பாட்டுச் சொற்கள் (culture specific terms) ஒலிபெயர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஒலிபெயர்த்துக்

கூறப்பட்ட சொற்கள் கருதும் பொருள் ஆங்காங்கே அடிக்குறிப்பாக ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளது. காட்டாகக், 'கைக்கிளை' என்னும் கவிதையியற் கருத்தீடு ஆங்கிலக் கவிதையியல் மரபில் காணப் படாமையின், அதனை மொழி பெயர்க்காமல் 'Kaikkiḷai' என்றே மொழிபெயர்ப்புப் பகுதியில் தந்து, அடிக்குறிப்பில் அது கருதும் இலக்கணப் பொருள் ஆங்கிலத்தில் விளக்கப்பட்டுள்ளது. பொரு ளதிகாரம் முழுவதும் மொழிபெயர்க்கப்பட்ட பின்னர் பின் னிணைப்பாக இடம்பெறும் கலைச்சொல் அகராதியில் இத்தகைய சொற்கள் எல்லாம் பொருள் விளக்கத்தோடு தமிழிலும், ஆங்கிலத் திலும் தரப்படும். மொழிபெயர்ப்பின் படிப்பினிமை (readability) சிதையலாகாது என்னும் காரணத்தால் இவ்விளக்கங்கள் நூலி னுள்ளே தரப்படவில்லை.

புறத்திணை இயலில் ஆளப்பட்டுள்ள புறனே என்னும் சொல் ஒரு கோட்பாட்டைக் குறிக்கும் கலைச் சொல்லாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது. இது கருதும் பொருள் இன்னதென்று தெளி வாக விளங்கவில்லை என்பது மேலே விரிவாக ஆராயப்பட் டுள்ளது. எனவே இதனை மொழிபெயர்க்க இயலாத நிலை ஏற் பட்டது. முன்னைய மொழிபெயர்ப்பாளர்கள் இதனை ஒலி பெயர்த்துக் கூறியுள்ளனர். ஆனால் அடிக்குறிப்பாகவோ பிற வகை யிலோ விளக்கம் தரவில்லை. இலக்குவனார் தமது விளக்கப்பகுதி யில் 'counter part' என்னும் சொல்லை இதற்கீடானதாகக் கருதித் தந்துள்ளார். (ப. 450). உரையாசிரியர்களின் விளக்கத்தை அடியொற்றி இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டது போலும். இரு கூறுகளும் ஒரே தன்மையினவாய், ஒரே தொழிற்பாடு உடையன வாய் இருக்கும் நிலையில் அவை ஒன்றுக்கொன்று 'counter part' என்று கூறுவது ஆங்கில மரபு. அகத்திணைகளும் புறத்திணைகளும் இத் தன்மையினவல்ல என்பது மேலே விளக்கப்பட்டது.

அகம், புறம் என்பன தமிழ் இலக்கிய மரபு கண்ட மானுட வாழககையின் இன்றியமையாத கூறுகள்; ஒன்றையொன்று அவாவி நிற்பன; எனினும் தொழிற்பாட்டால் வேறுபட்ட தன்மையின. எனவே counter part' என்பதைவிட 'இணையானவை' என்னும் பொரு ளுடைய parallel' என்னும் மொழிபெயர்ப்பு பொருத்தமாகலாம் என்று கருதி, 'அகம் அல்லாத இணை' என்னும் கருத்தை உட்

கொண்ட "non - akam parallel" என்னும் தொடர் புறனே என்னும் சொல்லுக்குரிய மொழிபெயர்ப்பாகத் தரப்பட்டுள்ளது. இதைவிடப் பொருத்தமான மொழிபெயர்ப்பு எதிர்காலத்தே தோன்றுமாயின், இதனை மாற்றிக் கொள்ளலாம் என்னும் எண்ணத்தில் தற்போது இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இதுவரை இம் முன்னுரையில் கூறப்பட்டதிலிருந்து, இம் மொழிபெயர்ப்பில் எதிர்கொண்ட சிக்கல்களில் பெரும்பாலன மூல பாடப்பொருளை உணர்ந்து கொள்ளுதல் தொடர்பானவை என்பதும், சில மொழிபெயர்ப்புத் தொடர்பானவை என்பதும் பெறப்பட்டன. இம் மொழிபெயர்ப்புப் பணி காலங் கண்ணிய கடமையாதலின் அவ்வெல்லைக்குள் கிடைத்த தரவுகள், ஆய்வு கள் மற்றும் அறிஞர் பலரது கருத்துகள் ஆகியவற்றின் துணை கொண்டு இயன்றாங்கு செய்யப்பெற்றுள்ளது. இதிற் காணும் கருத்துகளும், மொழிபெயர்ப்பும் முடிந்த முடிபுகள் அல்ல என்பது வெளிப்படை. இதனைப் படிக்க நேரும் அறிஞர் பெருமக்களின் திறனாய்வுக் கருத்துகளும், ஆலோசனைகளும் நன்றியுடன் வர வேற்கப்படுகின்றன.

நன்றியுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் வருகைதரு பேராசிரியர் என்னும் பணிநிலைகளைத் தோற்றுவித்துத் தமிழாராய்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வரும் நிறுவனத் தலைவரும், தமிழ் ஆட்சிமொழி மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சருமாகிய மாண்பு மிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கட்கும், அத்தகைய பேராசிரியருள் ஒருவராக என்னைத் தேர்வு செய்த உயர்நிலைக் குழு விற்கும் என் அன்பார்ந்த நன்றி உரியது.

வருகைதரு பேராசிரியராக நியமனம் பெற்ற பின்னர் எனக் குரிய ஆய்வுத் திட்டமாகத் தொல்காப்பியப் பொருளதிகார மொழி பெயர்ப்புப் பணியை அளித்து, அப்பணி செவ்வனே நிறைவேறத் தேவையான எல்லா உதவிகளையும் தயங்காமல் உடனுக்குடன் செய்து உதவிய நிறுவன இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்கட்கும், இந்நிலையில் அவர்க்குத் துணைநின்ற அலுவலர் கட்கும், வேண்டியபோது நூல்கள் தந்துதவிய நிறுவன நூலக அலு வலர்கட்கும் மிகவும் நன்றியுடையேன்.

பொருளதிகார நூற்பாக்கள் மற்றும் அவற்றின் உரை வேறு பாடுகளால் ஏற்பட்ட ஐயங்களும் குழப்பங்களும் என்னை அலைக் கழித்த போதெல்லாம் தொலைபேசி வழியாகத் தொடர்பு கொண்டு கொடுத்த தொல்லைகளையெல்லாம் பொறுத்துக் கொண்டு தேவை யான விளக்கங்களையும் தீர்வுகளையும் சலிப்பின்றி அளித்துதவிய மூதறிஞர் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கட்கும், பல் வேறு ஆய்வுச் சூழலில் உசாத்துணையாக நின்று விளக்கம் தந்து ஊக்கப்படுத்திய பேராசிரிய நண்பர் பொன். கோதண்டராமன் அவர் கட்கும், இந்நூலின் கையெழுத்துப் படியையும் அச்சுப்படியையும் படித்துத் திருத்தம் செய்து உதவிய நண்பர் பேராசிரியர் இ. சுந்தர மூர்த்தி அவர்கட்கும் எனது உளம்கலந்த மகிழ்வான நன்றி என்றும் உரியது.

ஆய்வுத்திட்டம் நிறைவேறிய நிலையில் இதனைச் சீர்தூக்கி வெளியிடுவதற்கான ஏற்பினை உவந்தளித்த பதிப்புக்குழு உறுப்பினர் கள் பேராசிரியர் இரா. இளவரசு, பொன். கோதண்டராமன், இ. சுந்தர மூர்த்தி ஆகியோர்க்கு என் மகிழ்வார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

சென்னை - 20 **அ.அ. மணவாளன்**
24.11.98.

INTRODUCTION

This piece of translation of the first two chapters of the third book of Tolkāppiyam, called Poruḷatikāram is the result of a project work undertaken and completed by me during my tenure (1997-1998) as a visiting professor at the International Institute of Tamil Studies, Chennai - 113. Although the directions were to prepare an English version of Poruḷatikāram as in the case of the first two books of Tolkāppiyam, done earlier by the Institute, I preferred to enlarge the audience by choosing to provide a short and lucid commentary in Tamil, too. This decision was also taken in keeping with a modern theory of translation which recommends that as regards translation of ancient texts composed in verse form, it is better to first paraphrase the text in the source language and then to render the same into a target language to ensure greater fidelity on the one hand and effortless readability on the other.

There have been several attempts, as follows, at translating Poruḷatikāram into English in parts or in full:

1. E.S. Varadaraja Iyer

   akattiṉai iyal, kaḷaviyal, kaṟpiyal and Poruḷiyal - 1948.

2. P.S. Subrahmanya Sastri

   akattiṉai iyal, Puṟattiṉai iyal - 1950.
   kaḷaviyal, kaṟpiyal, Poruḷiyal - 1952.
   meyppāṭṭiyal, Uvamai iyal, ceyyuḷiyal, marapiyal - 1956.

3. S. Ilakkuvanar

   Poruḷatikāram - in full - 1963.

4. Nirmal Selvamony

   akattiṉai iyal - 1989.

Nirmal Selvamony lists, in the Introduction to his above work, two more scholars, R. Vasudeva Sarma and Vidwan Vativel Pillai as translators of akattiṇai iyal and Puṟattiṇai iyal (1933, 1934). I did not have the opportunity of perusing their translations. The above four, on the other hand, I have been perusing with great interest as and when needed and eventually have been benefited by them both as guides and deterrants. I owe every one of them a debt of gratitude for functioning as such.

தொகைநிலை என்னுந் துறையொடு தொகைஇ
வகைநான் மூன்றே துறையென மொழிப.

மேற்கூறிய எட்டு வகையோடு குடைநாட்கோள் முதலாகத் தொகைநிலை இறுதியாகக் கூறப்பட்டுள்ள விரி பன்னிரண்டும் உழிஞைத் திணைக்கு உரியன என்று கூறுவர்.[13] அவை பன்னிரண்டும் வருமாறு :

11. "அகமிசைக்கு இவர்ந்தோன் பக்கமும் இகல்மதில் குடுமி கொண்ட மண்ணுமங்கலமும்" என்று நச்சினார்க்கினியர் கொண்ட பாடம் நூற்பாவின் யாப்பமைதிக்கும் பொருளமைதிக்கும் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

5. the inexhaustible resources of the besieged king;

6. loss and suffering inflicted upon the besieged;

7. the solo fight by the besieged outside the fort after its fall;

8. the invulnerability of the great fort which defies all attempts by the besieger.

All commentators, medieval and modern, except Iḷampūraṇar hold that the first four of the above relate to the besieger and the next four to the besieged.

69. kuṭaiyum vāḷum nāḷkōḷ aṉṟi
maṭaiyamai ēṇimicai mayakkamum kaṭaiic
cuṟṟamar oḷiya veṉṟukaik koṇṭu
muṟṟiya mutirvum aṉṟi muṟṟiya
akattōṉ vīḻnta nocciyum maṟṟataṉ
puṟattōn vīḻnta putumai yāṉum
nīrcceru vīḻnta pāciyum ataaṉṟu
ūrcceru vīḻnta maṟṟataṉ maṟaṉum
matilmicaikku ivarnta mēlōr pakkamum
ikalmatiṟ kuṭumikoṇṭa maṇṇu maṅkalamum[12]
veṉṟa vāḷiṉ maṇṇōṭu oṉṟat
tokainilai eṉṉum tuṟaiyoṭu tokaii
vakaināṉ mūṉṟē tuṟaiyeṉa moḻipa.

The following twelve tuṟais from kuṭaināḷkōḷ through tokainilai are said to relate to uḻiñait tiṇai, in addition to the eight kinds described in the previous cūtra.[14]

---

12. The following reading of Nacciṉārkkiṉiyar sounds more authentic in view of the metrical cadence and meaning of the verse:

"akamicaikku ivarntōṉ pakkamum ikalmatil
kuṭumi koṇṭa maṇṇumaṅ kalamum."

1-2. குடைநாள் - கோள், வாள்நாள்கோள்: அதாவது, நல்லதோர் முழுத்தத்தில் உழிஞையான் தன்கொற்றக் குடையையும் வெற்றி வாளையும் முன்னே செல்ல விடுதல்,

3. முற்றுகையிட்ட மதிலின்மேல் ஏணி சார்த்தி அதன்மேல் நின்று செய்யும் போர்களும்,

4. மதிலின் புறத்தே செய்யும்போர் விரைவில் முடிக என்று உறுதி பூண்டு நிகழ்த்தும் முற்றுகைப்போரும்,

5. சூழப்பட்ட மதிலின் உட்புறம் உள்ளோர் சினந்து செய்யும் மதில் காத்தலாகிய நொச்சிப்போரும்,

6. முற்றுகையிட்டிருக்கும் உழிஞைவீரர்கள் மதிலின் உட்புறம் பாய்ந்து செய்யும் வேட்கைப் போரும் ,

7. மதிலையடுத்துள்ள நீர்க்கிடங்கில் குதித்து இருபாலாரும் எதிர்த்துப் போரிடும் பாசிநிலையும்,

8. அதுதவிர, நீர்க்கிடங்கினைக் கடந்து ஊரினுள் சென்று அவ்வூராரோடு நிகழ்த்தும் போராகிய பாசிமறனும்,

9. மதிலைக் கைப்பற்றுவதற்காகப் பரந்து சென்ற வீரர்களின் பகுதியும்,

10. பகைவரின் மதிலைக் கைக்கொண்டதும் அவ் அரசனின் முடிக்கலம் கைக்கொண்ட பின்னர் எடுத்த மண்ணுமங்கலச் சிறப்பும்,

11. வென்றி தந்த தன்வாளினையும் நீராட்டி எடுத்த மண்ணு மங்கல விழாவும்,

12. மதிலிழந்து, முடியிழந்து சோர்ந்த நிலையில் மதிலினர் எல்லாம் முரண் அவிந்து தொக்கு நின்று வென்றோனைச் சென்றடையும் தொகைநிலையும்

என உழிஞைத் திணைக்குரிய துறைகள் பன்னிரண்டாகும் என்பர்.

---

13. முன்னைய நூற்பாவில்(68) தொல்காப்பியர் தம் கருத்துப்படி உழிஞைத்திணையின் வகைகளைக் கூறுகிறார்; இந்த நூற்பாவில் (69) தம்முன்னோர் கருத்துப்படி உழிஞைத்திணையை வகைப்படுத்துகிறார் எனக் கூறும் பி.சா.சு. சாஸ்திரியாரின் கருத்து பொருத்தமாகத் தோன்றவில்லை. வகைத்தே என்றும் துறை என்றும் பிரித்துக் கூறும் பாங்கினையும், தொல்காப்பியர் கூறும் இலக்கணக் கருத்துகளுள், ''இவை தொல்காப்பியர் கோட்பாடு, இவை அவருக்கு முன்னைய இலக்கணிகளின் கோட்பாடு'' என்று தெளிவாகப் பிரித்துணர இயலாத பாங்கினையும் நோக்கினால், சாஸ்திரியாரின் விளக்கம் மிகையானது என்பது தெளிவாகப் புலப்படும்.

1. sending the royal umbrella in an auspicious hour before he begins the besiege,
2. sending the royal sword in an auspicious hour before he begins the besiege,
3. the battles fought by the armies of both the besieger and the besieged while the former ascend on the ladders over the fort.
4. the besieger's determination to capture the fort sooner resulting in a fierce battle,
5. the defensive spirited attack by the besieged,
6. a renewed attack inside the fort by the besieging army,
7. the battle in the moat called *pācinilai,*
8. the battle called pācimaṟaṉ fought by the besieging army within the town after crossing the moat,
9. the brave act of capturing the inner fort by the army of the besieger,
10. taking a ceremonial bath inside the fort of the defeated king as a mark of victory, or uncrowning the defeated king and crowning himself as the king of the conquered land,
11. celebrating the victor's sword by giving it a ceremonial wash,
12. gathering the victor's army together for offering suitable rewards or collecting the various columns of the defeated army for consolidation under the victor's command.

---

14. P.S. Sastri's distinction that in cūtra 68 Tolkappiyar classifies uḻiñait tiṇai in accordance with his opinion and in this cūtra he classifies it according to his predecessors does not seem to be correct. Because it is not always easy for us to distinguish his original ideas from those of his tradition. Moreover he follows a method whereby first he speaks of the kinds of a tiṇai and then he lists the tuṟais of the tiṇai. His use of distinct terms *vakai* and *tuṟai* in the above cūtras would make this point clear.

70. தும்பை தானே நெய்தலது புறனே,
மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை அழிக்குஞ் சிறப்பிற் றென்ப.

தும்பை என்னும் புறத்திணை நெய்தல் என்னும் அகத் திணைக்குப் புறனாக அமையும். அது தன் வலிமை காரணமாகப் போர்செய்யவந்த அரசனை எதிர்த்து நின்று அவனுடைய தலைமை உணர்வை அழித்தொழிக்கும் சிறப்பினை உடையது என்பர்.

71. கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இருநிலம் தீண்டா அருநிலை வகையோடு
இருபாற் பட்ட ஒருசிறப் பின்றே.

பகைவீரரின் எண்ணற்ற அம்புகளும் வேல்களும் நெருக்க மாகத் தைத்திருக்கின்ற காரணத்தால் உயிர்பிரிந்துசென்ற நிலையில் உள்ள உடலானது நிலத்தின்மேல் வீழாமல் நின்ற நிலையில் நிற்கும் அரியதொரு சிறப்பு இருபாற்பட்ட வீரர்க்கும் உரியதாகும்.

இரண்டிரண்டு கூறுகளாக அமையும் பிற திணைகளைப் போலன்றி, தும்பைத்திணை (தும்பை மறம்) போரில் ஈடுபடும் இரு திறத்து வீரர்களின் அரிய வீரநிலைகளை இருவர்க்கும் பொதுவான வையாகக் கூறிச் சிறப்பிக்கும் இயல்பினது. தும்பைத் திணையின் சிறப்பியல்பினை இந்த நூற்பா விளக்குகிறது.[15]

15. தும்பைத்திணையின் சிறப்புத்தன்மை, இளம்பூரணரின் நுதற்பொருள் விளக்கம், இளவழகனாரின் குறிப்புரை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தச் சூத்திரத்திற்குச் சூத்திரம் கிடந்தவாறே பொருள் கொள்ளப்பட்டுள்ளது.

''இருபாற்பட்ட'' என்னும் தொடரை 'வகை' என்பதனோடு கொண்டு கூட்டி உரையாசிரியர்கள் பொருள் காண்கின்றனர். இளம்பூரணரின் உரைப்பகுதியில் காணப் படும் நுதற்பொருள் விளக்கமும் அதனையடுத்து வரும் உரையும் தம்முள் மாறுபடு கின்றன. தற்போதுள்ள இளம்பூரணரின் பொருளதிகார உரை பல இடங்களில் சிதை வுற்று மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாக அமைகிறது.

70. **tumpai tāṉē neytalatu puṟaṉē**
maintuporu ḷāka vanta vēntaṉaic
ceṉṟutalai aḻikkuñ ciṟappiṟ ṟeṉpa.

Tumpait tiṇai is the non-Akam parallel to Neytal tiṇai. It has the great theme of destroying the pride and person of the king who invades his country on account of his over estimation of his martial power.

71. **kaṇaiyum vēlum tuṇaiyuṟa moyttaliṉ**
ceṉṟa uyiriṉ niṉṟa yākkai
iruṇilam tīṇṭā aruṇilai vakaiyōṭu
irupāṟ paṭṭa oruciṟap piṉṟē.

Stuck fast with showers of arrows and spears, the life - departed body of a soldier continues to stand in a fighting stance without falling (onto the ground). Such a rare feat of heroism is applicable to or observable with both sides of the army.[16]

---

16. The above meaning, differing from that of the commentators in general, is arrived at on the bases of (a) the general purport of Tumpait tiṇai to celebrate the heroic acts of the soldiers on both sides of the army, (b) Iḷampūraṇar's note on the special feature of Tumpait tiṇai, (c) Iḷavaḻakaṉār's note on this cūtra and (d) the natural syntactic order of the verse without resorting to transposition of words and phrases as is the case with the commentators.

72. **தானை, யானை, குதிரை என்ற
நோனார் உட்கும் மூவகை நிலையும்,
வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன்
தான்மீண்டு எறிந்த தார்நிலை, அன்றியும்
இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்,
ஒருவன் ஒருவனை உடைபடை புக்குக்
கூழை தாங்கிய பெருமையும், படையறுத்துப்
பாழி கொள்ளும் ஏமத் தானும்,
களிறெறிந்து எதிர்ந்தோர் பாடும் களிற்றொடு
பட்ட வேந்தனை அட்ட வேந்தன்
வாளோர் ஆடும் அமலையும் வாள்வாய்த்து
இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்
செருவகத்து இறைவன் வீழ்வுறச் சினைஇ
ஒருவனை மண்டிய நல்லிசை நிலையும்
பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன்
ஒள்வாள் வீசிய நூழிலும் உளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே.**

1-3. பகைவர்கள் அஞ்சத்தக்க போர்த்திறம் கொண்ட தானை வீரர்கள், யானைவீரர்கள், குதிரை வீரர்கள் என்னும் மூவகை வீரநிலையும்,

4. வேற்படை கொண்டு போர்செய்யும் வேந்தனை மாற்றார்படை சூழ்ந்து கொண்டவிடத்து, அவ்வேந்தனின் தார்ப்படைத் தலைவன் தன் இடம் விட்டுப் பெயர்ந்து அவர்களை எதிர்த்து அழித்தலாகிய தார்நிலையும்,

5. தத்தம் வேந்தர்க்காக அவரொடு சேர்ந்து பொருதலேயன்றித், தார்த் தலைவர்கள் இருவரும் தம்முள் பொருது அழியும் நிலையும்,

6. அவ் இருவருள் ஒருவன் தன்படையை நிலைகுலையச் செய்தவிடத்து அது குலையாதவாறு கூழைப்படையெனக் (பின்னணிப்படை) காத்தும், எதிர்த்தலைவன் அஞ்சி யொடுங்குமாறு எதிர்த்தும் நிற்கும் தறுகண்மையாகிய பெருமிதமும்.[17]

---

17. ''**கூழைதாங்கிய பெருமையும்**'' என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். ''**கூழைதாங்கிய எருமையும்**'' என்பது நச்சினார்க்கினியர் முதலானோர் கொண்ட பாடம். சிதையாது எதிர் நின்று தாங்கித் தடுக்கும் தலைவனின் தறுகண்மைக்கு உவமையாக எருமையைக் கொண்டு இத்துறையை **எருமை மறம்** என்று அவர்கள் கருதுவர்.

72. tāṉai yāṉai kutirai eṉṟa
nōṉār uṭkum mūvakai nilaiyum
vēlmiku vēntaṉai moyttavaḷi oruvaṉ
tāṉmīṇṭu eṟinta tārnilai aṉṟiyum
iruvar talaivar taputip pakkamum
oruvaṉ oruvaṉai uṭaipaṭai pukkuk
kūḻai tāṅkiya perumaiyum paṭaiyaṟuttup
pāḻi koḷḷum ēmat tāṉum
kaḷiṟeṟintu etirntōr pāṭum kaḷiṟṟoṭu
(10) paṭṭa vēntaṉai aṭṭa vēntaṉ
vāḷōr āṭum amalaiyum vāḷvāyttu
iruperu vēntar tāmum cuṟṟamum
oruvarum oḻiyāt tokainilaik kaṇṇum
ceruvakattu iṟaivaṉ vīḻvuṟac ciṉaii
oruvaṉai maṇṭiya nallicai nilaiyum
palpaṭai oruvaṟku uṭaitaliṉ maṟṟavaṉ
oḷvāḷ vīciya nūḻilum uḷappaṭap
pullit tōṉṟum paṉṉiru tuṟaittē.

Tumpait tiṇai which celebrates the martial feats of the various columns of the army on either side, consists of the following twelve tuṟais or subthemes:

1-3. The three kinds of formidable exploits shown by the infantry, elephantry and the cavalry,

4. The fury of a general who on seeing his king adept in spear fight being surrounded by the enemy's soldiers, leaves his charge, turns towards them and puts them to rout,

5. Apart from guarding their respective kings, the commanders of both the sides enter into personal combats and die fighting each other,

6. The undeterred heroism of a general who seeing his army in distress and disarray, rushes towards it as if from the reserve column and reinforces it to the enemy's dismay.[18]

18. Iḷampūraṇar's text reads as "kūḻai tāṅkiya *perumai*" whereas Naccinārkkiṉiyar's reads as, "kūḻai tāṅkiya erumai", meaning that the general resisted the surging army of the enemy and supported his disarrayed army as a buffalo. Consequently this tuṟai came to be called "erumai maṟam," buffalo combat.

7. படைக்கருவிகளைத் துரந்தபின்னர், வேறு கருவிகளின்றித் தன் மெய்வலியால் (உடல்வலிமையால்) பகைவரை எதிர்த்து நின்று போர்புரியும் ஏமமும்,[19]

8. தம் மேல்வரும் யானையை எதிர்த்துநின்று போர்புரியும் மறவர் நிலையும் அல்லது அழிவும்,

9. களிறுஊர்ந்து வந்துபொருது அழிந்த வேந்தனை அவனை வீழ்த்திய வேந்தனின் வீரர்கள் சூழ்ந்து நின்று புகழ்ந்து பாடுதலும் ஆர்ப்பரித்து ஆடுதலும்,

10. வாட்போர்முற்றிய நிலையில் போர்மேற்கொண்ட இரண்டு பெரிய அரசர்களும், அவர்களுடைய சுற்றமாகிய படைவீரர்களும் ஒருவர் தவறாமல் எல்லோரும் இறந்துபட்ட தொகை நிலையும்,

11. போரில் தன் அரசன் வீழ்ந்துபட அதுகண்டு சினமுற்ற படைத் தலைவன் வீரன் ஒருவனை நெருங்கிப் பொருத நற்புகழ் மிக்க நிலையும்,

12. எதிர்த்துநின்ற பல திறப்படைகளும் ஒருவனை எதிர்த்து நிற்க இயலாமல் உடைந்து ஓடும் நிலையில் அவன் ஒருவனே தன் ஒள்ளிய வாளை எறிந்து பலரையும் கொன்று குவிக்கும் நூழில் என்னும் துறையும் உள்ளிட்டுத் தும்பைப் பொருண்மையோடு பொருந்தித் தோன்றும் பன்னிரண்டு துறைகளை உடையது தும்பைத் திணையாகும்.

19. இதில் வரும் ஏமம் என்னும் சொல் இவ்விடத்தில் என்னபொருளில் கையாளப் பட்டுள்ளது என்று தெளிவாகப் புலப்படவில்லை. 'மயக்கம்' என்று நச்சினார்க்கினியரும், 'பாதுகாவல்' என்று ச.சோ.பாரதியாரும் பொருள் காண்கின்றனர். தொல்காப்பியத்தில் ஏமம் என்னும் சொல் ஆறிடங்களில் (பொருள்.40, 53, 72, 77, 109, 190) பயின்றுள்ளது. இளம்பூரணர் ஓரிடத்தில் மட்டும் (சூ.77) ஓம்புதல் என்று பொருள்கூறிப் பிற இடங்களில் பொருள் கூறாது ஏமம் என்றே குறிப்பிடுகிறார். நச்சினார்க்கினியர் பதியெழுவறியா (40), மருந்துபிறிதில்லா(53), மயக்கம்(72) யாமம், காப்பு (77), பாதுகாவல் (109), ஏமம் (190) என்று பல பொருள் கூறுகிறார். ஓரிடத்தே மருந்து பிறிதில்லா(53) என்றும் ஏனைய இடங்களில் பாதுகாவல் என்றும் பாரதியார் பொருள் காண்கிறார். ஓரிடத்தே மயக்கம்(72) என்றும் பிற இடங்களில் பாதுகாவல் என்றும் பாலசுந்தரனார் பொருள் கொள்கிறார். பிற இடங்களில் எல்லாம் பாதுகாவல் என்று பொருள்கூறும் இளவழகனார் ஓரிடத்தில்(72) போர்க்களிப்பு என்று பொருள் காண்கிறார். இளம்பூரணரை ஒட்டி மேலே ஏமம் என்றே பொருள் கொள்ளப்படுகிறது.

7. The heroic feat of fighting the enemy with one's physical prowess, after having served all the weapons on the enemy,[20]

8. The warriors' spirit of fighting fearlessly with the elephants that charge them in the battle field and eventually their death,

9. Singing a eulogy and dancing in glee around the body of a fallen king riding an elephant, by the warriors of the victorious king who killed his rival in the fight.

10. The tuṟai "tokainilai" which signifies the death and destruction of the warriors and their kings in toto on either side towards the end of their fight with swords,

11. The praiseworthy act of a commander who, having seen his king dead in the battle, ferociously attacks the enemies in retaliation,

12. The tuṟai "nūḻil" celebrates the extraordinary feat of heroism of a warrior who, having terrified into retreat several columns of the enemy's army, slaughters many a warrior with his brilliant sword.

---

20. It is not clear in exactly what sense the term *ēmam* is used in this cūtra. Iḷampūraṇar simply repeats the same in his gloss, while Naccinārkkiṉiyar glosses it as "mayakkam", meaning fighting and others as 'kāval', meaning safeguard or security. The term ēmam occurs in six places in the third Book of Tolkāppiyam (40,53,72,77, 109 and 190). Iḷampūraṇar glosses it as safeguard or ward off in one place (77) and just repeats the word elsewhere. Naccinārkkiṉiyar offers several meanings: a town so selfreliant that no one leaves it for want of anything (40), remediless (53), close fighting (72), safeguard, security (77, 109) and just ēmam (190). S.S. Bharatiyār interprets as remediless (53) and security and safeguard (40,72,77,109,190). Balasundaram and Iḷavaḻakaṉar take the term to mean boxing and rejoicing in martial feats, respectively in72 and safeguard or security in all other places. Iḷavaḻakaṉār's gloss is followed in the above translation.

73. வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப.

வாகை என்னும் புறத்திணை பாலை என்னும் அகத்திணைக் குப் புறனாகும். கேடில்லாத கோட்பாடுகளை உடைய தொழிலுக்கு உரியவர்கள் தத்தம் துறைகளிற் சிறந்து நிற்கும் நிலையை உயர்த்திக் கூறுதலாகிய இலக்கணநெறியினை உடையது வாகைத்திணை என்று கூறுவர்.

இவ்வாறு மேம்படப் புகழ்ந்து கூறுதலாகிய இயல்பு தம்மைத் தாமே புகழ்ந்து கூறுதலும் தம்மைப் பிறர் புகழ்ந்து கூறுதலும் ஆகிய இருவகையாகவும், ஒருவரை உறழ்ச்சியின்றி அவரளவில் புகழ்ந்து கூறுதல், ஒருவரைப் பிறரோடு உறழ்ந்தும், ஒப்பிட்டும் காட்டிப் புகழ்ந்து கூறுதல் ஆகிய இருவகையாகவும் வெளிப்படும்.

74. அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கின் தாபதப் பக்கமும்
பாலறி மரபின் பொருநர் கண்ணும்
அனைநிலை வகையோடு ஆங்கெழு வகையால்
தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்.

1. ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுவகை ஒழுக்கங்களை அல்லது தொழில்நிலைகளை உடைய பார்ப்பனக் கூறும்,
2. ஓதல், வேட்டல், ஈதல், படைவழங்குதல் (போரின்கண் படைக்கருவிகளை ஆளும்திறம்), குடியோம்புதல் என்னும் ஐவகைக் கடமைகளை உடைய அரசர் கூறும்,
3. ஓதல், வேட்டல், ஈதல், உழவு, வாணிகம், நிரையோம்பல் என்னும் அறுவகைக் கடமைகளை உடைய வணிகர் கூறும், உழவு, உழவொழிந்த பிற தொழில்கள், ஈதல், (விருந்தோம்பல் முதலாயின), நிரை ஓம்பல், ஓதல், வழிபாடு என்னும் அறுவகைக் கடமைகளை உடைய வேளாளர் கூறும் அடங்கிய ஏனோர் பகுதியும்,

73. **vākai tāṉē pālaiyatu puṟaṉē**
tāvil koḷkait tattam kūṟṟaip
pākupaṭa mikutip paṭuttal eṉpa.

Vākait tiṇai is the non - Akam parallel to pālait tiṇai. The general theme of vākait tiṇai is to celebrate in glorious terms the eminence of persons excelling in their respective fields of flawless expertise.

Such tributes of glory may be paid in two ways: either the person eulogizes himself on his excellence or is praised by some one else on that score; or a person is praised on the merits of his own achievement, or he is extolled as excelling others by comparison and contrast.

74. **aṟuvakaip paṭṭa pārppaṉap pakkamum**
aivakai marapiṉ aracar pakkamum
irumūṉṟu marapiṉ ēṉōr pakkamum
maṟuvil ceyti mūvakaik kālamum
neṟiyiṉ āṟṟiya aṟivaṉ tēyamum
nāliru vaḷakkiṉ tāpatap pakkamum
pālaṟi marapiṉ porunar kaṇṇum
aṉainilai vakaiyōṭu āṅkeḷu vakaiyāl
tokainilai peṟṟatu eṉmaṉār pulavar.

1) The eminence of "pārppār" in six kinds of duties such as education, teaching, performing sacrifices, causing others to perform sacrifices, liberality and receiving gifts.
(The name pārppār refers to the brahmin class. Antaṇar, Maṟaiyōr, and Aiyar are the other terms used in Tōlkappiyam to refer to the same group of people. This class is not an Aryan group, but a class of Tamil people with distinct cultural features incompatible with those of the Aryan group.)
2) Five kinds of duties characteristic of the ruling class: education, performing sacrifices, munificence, warfare and protecting the people.
3) Six kinds of occupation and duty engaged in by the merchant class: education, performing sacrifices, liberality, farming, business and looking after the cattle.
Six kinds of duty and occupation engaged in by the agricultural class: farming, allied trades, hospitality, taking care of the cattle, education and receiving guests and elders with love and devotion.

4. மழை, பனி, வெயில் என்னும் மூன்றுவகைக் காலங்களுக்கும் (பருவங்களுக்கு) அடிப்படையான கோள்நிலைகளை முறைப் பட ஆராய்ந்து அவற்றின் பயன்களை எடுத்துக்கூறும் குற்றமற்ற தொழிலினை உடைய அறிவனது கூறும்,

5. எண்வகை துறவு மற்றும் யோகநெறிகளையுடைய தாபதர் கூறும்,

6. வாட்போர், மற்போர் முதலிய போர்நெறிகளைக் கடமையாக உடைய பொருநர் கூறும்,

7. அதுபோன்று சொல், இசை, கூத்து, சூது போன்ற பிறவகைகளில் சிறந்து நிற்கும் கூறும்,

ஆகிய எழுவகை நிலைகளிலும் மேம்பட்ட கூறுகளைத் தொகை நிலைகளாகப் பாகுபடப் பெற்றது வாகைத்திணை என்று பொருளிலக்கணப் புலவர்கள் கூறுவர்.[21]

---

21. பெரும் கருத்து வேறுபாட்டிற்குரிய நூற்பாக்களுள் இதுவும் ஒன்று.

இளம்பூரணர் உரையைப் பெரும்பாலும் அடியொற்றி மேலே கண்ட உரை தரப்பட்டுள்ளது. பார்ப்பனப்பக்கம், அரசர்பக்கம், ஏனோர் பக்கம் என்னும் தொடர்களுக்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கமும் காட்டுகளும் தொல்காப்பியர்காலத் தமிழ் மரபு களுக்கு ஏற்றனவாகத் தோன்றவில்லை. வரம்பிகந்து வடவரொழுக்கத்தைத் தொல் காப்பியர் நூலுக்கு ஏற்றியுரைப்பது பண்பாட்டு வழுவாகத் தோன்றுகிறது. இனி, இவரை மறுத்து எழுந்த இக்கால உரைகாரர்களாகிய ச.சோ. பாரதியார், சோம. இளவரசு ஆகியோர் இந்த நூற்பாவுக்குக் காணும் புத்துரைகளும், எதிர்ப்புகளும் தமிழ்ப் பண் பாட்டின்மீது இவர்கள் கொண்ட பற்றையும் ஆர்வத்தையும் புலப்படுத்துகின்றன வாயினும், தொல்காப்பியரின் நூல்நெறியோடு முற்றிலும் பொருந்துவனவாகத் தோன்ற வில்லை. பாலசுந்தரனாரின் காண்டிகையுரை பண்டைய உரையாசிரியர்களை ஓரளவு அடியொற்றி மற்றுமொரு புதிய விளக்கத்தைத் தருகிறது; பாரதியார் போன்றோரின் இக்காலப் புத்துரையை மறுத்து ஒதுக்குகிறது. இவர், ''அனைநிலை'' என்னும் தொட ருக்குரிய வேறுபாடமாக ''மனைநிலை'' என்னும் தொடரைப் பயன்படுத்துகிறார். இதுவரை நடைபெற்றுள்ள பாடவேறுபாட்டு ஆய்வுகளில், இந்தப் புதுப்பாடம் குறிப்பிடப்பெறவில்லை. 'பொருநர் கண்ணு மனைநிலை' என்பதைக் 'கண்ணும் அனைநிலை'என உரையாசிரியர்கள் பிரிக்க, பாலசுந்தரனார் 'கண்ணும் மனைநிலை' எனப் பிரித்துக் கொண்டு அதற்கேற்ற இலக்கியச் சான்றுகளைத் தருகிறார்.

4) To study the positions of the planets and other meteoric conditions in terms of their influence and effects on the threefold seasons, the summer, the rainy and the dewy, and predict their influences on mankind, is the duty of the sages and astrologers.

5) The eminence of the ascetics in carrying out their eightfold functions in yoga and meditation.

6) The excellence of the warriors in carrying out their martial duties

7) Excellence in other allied fields such as debates, music, drama, gambling and so on.

The expert poeticians say that vākait tiṇai shall have the above seven groups of duties and occupations to be celebrated in literature as peaks of achievements.[22]

---

22. This is one of the cūtras subjected to various conflicting interpretations. The above paraphrase is based upon the commentary of Iḷampūraṇar.

The interpretations given by Nacciṉārkkiṉiyar for the phrases "pārppaṉap pakkam", "aracar pakkam" and "ēṉōr pakkam" are farfetched and samacks of his bias towards Aryan culture and are not maintainable in regard to the cultural ambience of Tolkāppiyam.

The modern commentators like S.S. Bharatiyār and Soma. Iḷavarasu in righteous reaction to the commentary of Nacciṉārkkiniyar go to the other extreme and give an interpretation which is also mostly farfetched and irrelevant to the context of the text.

S. Balasundaranar offers yet another interpretation although he follows the medieval commentators very closely. His reading "maṉainilai" for the existing reading "aṉainilai" in the penultimate line is quite new but not supported by any other text or manuscript.

75\. கூதிர் வேனில் என்றிரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய வகையினும்
ஏரோர் களவழி அன்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியும் தேரோர்
வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்
ஒன்றிய மரபின் பின்தேர்க் குரவையும்
பெரும்பகை தாங்கும் வேலி னானும்
அரும்பகை தாங்கும் ஆற்ற லானும்
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும்
ஒல்லார் நாணப் பெரியவர்க்[23] கண்ணிச்
சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்த்துத்
தொல்லுயிர் வழங்கிய அவிப்பலி யானும்
ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கினும்
பகட்டி னானும் ஆவி னானும்
துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கமும்
கடிமனை நீத்த பாலின் கண்ணும்
எட்டுவகை நுதலிய அவையகத் தானும்
கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்
இடையில் வண்புகழ்க் கொடைமை யானும்
பிழைத்தோர்த் தாங்கும் காவ லானும்
பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்
அருளொடு புணர்ந்த அகற்சி யானும்
காமம் நீத்த பாலி னானுமென்று
இருபாற் பட்ட ஒன்பதின் துறைத்தே.

1\. கூதிர்ப் பாசறை, வேனிற்பாசறை எனப் பெயர்பெற்ற இருவகைப் பாசறையிலும் தங்கிப் போர்மேற் கொண்ட பெருவிருப்பால் தன் மனைவிமாட்டுச் செல்லும் காதல் மனத்தை அடக்கிய வென்றியும்,

---

23\. இந்த இடத்தில் மட்டும் வரும் பெரியவர் என்னும் சொல்வழக்கு (உயர்திணைப் பன்மைப் பொருளில்) தொல்காப்பியர் காலத்திற்கு உரியதாகக் காணப்படவில்லை. பெரியர், பெரியோர் என்பதே அவர்கால வழக்காக இருந்திருக்கலாம். தொல்காப்பியத் திற்குப் பிற்பட்டதாகக் கருதப்படும் சங்க இலக்கியத்திலும் ஒரே ஒரு இடத்தில் மட்டும் (நற்.266) உயர்வுப்பன்மையாக இச்சொல் வழங்கப்பட்டுள்ளது. எனவே உரையாசிரி யர்கள் கொண்டுள்ள பெரியவர் என்னும் பாடம் ஐயத்திற்கு உரியதாக உள்ளது.

75. kūtir vēṉil eṉṟiru pācaṟaik
kātaliṉ oṉṟik kaṇṇiya vakaiyiṉum
ērōr kaḷavaḻi aṉṟik kaḷavaḻit
tērōr tōṟṟiya veṉṟiyum tērōr
veṉṟa kōmāṉ muṉtērk kuravaiyum
oṉṟiya marapiṉ piṉtērk kuravaiyum
perumpakai tāṅkum vēli ṉānum
arumpakai tāṅkum āṟṟa lāṉum
pullā vāḻkkai vallāṇ pakkamum
ollār nāṇap periyavark[24] kaṇṇic
colliya vakaiyiṉ oṉṟoṭu puṇarttut
tolluyir vaḻaṅkiya avippali yāṉum
ollār iṭavayiṉ pulliya pāṅkiṉum
pakaṭṭi ṉāṉum āvi ṉāṉum
tukaḷtapu ciṟappiṉ cāṉṟōr pakkamum
kaṭimaṉai nītta pāliṉ kaṇṇum
eṭṭuvakai nutaliya avaiyakat tāṉum
kaṭṭamai oḻukkattuk kaṇṇumai yāṉum
iṭaiyil vaṇpukaḻk koṭaimai yāṉum
piḷaittōrt tāṅkum kāva lāṉum
poruḷoṭu puṇarnta pakkat tāṉum
aruḷoṭu puṇarnta akaṟci yānum
kāmam nītta pāli ṉāṉumeṉṟu
irupāṟ paṭṭa oṉpatiṉ tuṟaittē.

Vākait tiṇai consists of eighteen *tuṟais* or subthemes which celebrate two kinds of heroism, the martial valour and the ethical excellence. The first nine subthemes relate to martial heroism and the next nine to ethical eminence.

1. exclusive concentration on war while staying in warcamps during winter and summer, without allowing his mind to think of his wife at home,

24. The noun *Periyavar* as a human plural is a lonely usage in Tolkāppiyam. Even in Caṅkam literature which is supposed to be later, there is only a solitary occurrence (Naṟ : 266) and that too used as a honorific plural. All the commentators, medieval and modern, have the same reading which sounds quite odd, lexically and linguistically as well.

2. போர்க்களத்தை ஏர்க்களமாக உருவகிப்பதும், போர்க்கள நிகழ்ச்சிகளை நேரிடையாகவும் உருவகமுகத்தான் களவேள்வி யாகவும் வருணிப்பதும் ஆகிய போர்க்கள வென்றியும்,
3. தேர்வீரரை வென்றழித்த அரசனின் தேர்முன் அவனுடைய படைவீரர் ஆடும் குரவையும் அல்லது தேர்மீது வந்த அரசனை யும் வீரர்களையும் கொன்று அழித்த அரசன் அவர்களுடைய தேரின்முன்நின்று ஆடும் முன்தேர்க் குரவைக்கூத்தும்,
4. வெற்றிபெற்ற அரசனது தேரின்பின்னால் அவனுடைய வீரர் களும், விறலி, பேய்க்கணம் முதலியனவும் அவன் புகழைப் பாடி ஆடும் பின்தேர்க் குரவைக்கூத்தும்,
5. பெரிய பகைப்படையைத் தடுத்து அழிக்கும் வேல்வென்றியும்,
6. பொருதற்கரிய பகைப்படையை எதிர்த்து நின்று அழிக்கும் ஆற்றலும்,
7. வளமற்ற எளியவாழ்க்கையை உடையவனாயினும் மறாது வழங்கும் ஆண்மகனது கொடை வென்றியும், அல்லது, சிறவாத இவ்வுலக வாழ்க்கையை மதியாமல் வானுலக வாழ்க்கையை விரும்பி அதன்பொருட்டு மேற்கொள்ளும் வலிய ஆண்மை மிக்க போர்த்தொழில் வென்றியும்,
8. பகைவர்கள் நாணும்படியாகப் பெரும் மறவர்களைக் குறித்து முன்பு சொன்ன வஞ்சின வகை இரண்டனுள் ஒன்றைத் தேர்ந்து தொன்றுதொட்டு வருகின்ற உயிரை வழங்கிய அவிப்பலியும்,
9. பகைவர் நாட்டைக் கைக்கொண்டு உவந்த திறனும் அல்லது வாய்ப்பு நேர்ந்தபோது பகைவரை நட்பாக ஏற்றுக்கொண்ட பெருந்தகவும்,
10. எருதால் சிறப்புடைய சான்றோரின் பெருமையும், ஆவால் சிறப்புறும் சான்றோரின் பெருமையும்; (வேளாண் மாந்தர், கோவலர் ஆகியோரது பெருமை)
11. பிறர்மனை நயவாத ஒழுக்க வென்றியும்.[25]

---

25 ''கட்டில் நீத்தபால்'' என்று பாடம் கொள்ளும் நச்சினார்க்கினியர் அரசுக் கட்டிலைத் துறக்கும் பெருமிதம் என்று பொருள் கொள்கிறார். இளவழகனாரும், பாரதியாரும் பாலசுந்தரமும் இவர் பாடத்தைக் கொள்கின்றனர். மர்ரே ராஜம் பதிப்பு இளம்பூரணர் பாடத்தைக் கொண்டுள்ளது. இரண்டில் எது சரியான பாடமாக இருக்கும் என்று துணிய இயலவில்லை.

2. Feats of valour in the battle field described as comparable to achievements in agricultural fields or described metaphorically as performing sacrifices,

3. the *kuravai* dance infront of the chariot of the victorious king by his soldiers, or a similar dance by the king himself in front of the chariots of his slain enemies,

4. the *kuravai* dance behind the chariot of the conqueror by his soldiers and dancers, singing his victory over the enemy,

5. the glory of the spear that withstood the attack of the huge army,

6. the might of the warriors to oppose and contain the formidable enemy,

7. generosity in spite of one's limited resources, or determination to fight to the end without caring for one's evanescent life,

8. choosing to sacrifice one's life in keeping with his vows taken in honour of the great heroes and thus putting the enemies to shame,

9. seizure of enemy's land without war, or to make friends with one's enemy should there be an occasion to do so.

10. greatness of those who use bulls and those who use cows for their work or occupation (celebration of the eminence of the agricultural and the pastoral classes).

11. rectitude of a person who never covets other's wife[26]

---

26. Naccinārkkiniyar has a different reading for this line as, "kaṭṭil nītta pāliṉāṉum," meaning, abdicating the throne. Murray Rajam edition follows Iḷampūraṇar, while Iḷavazhakaṉār, Bharatiyār and Balasundaram follow Naccinārkkiniyar's reading. It is very difficult to decide between.

12. குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவு நிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை என்னும் எட்டு வகையினும் சிறந்த அவையத்தாரின் சிறப்பும், அல்லது இத்தகைய சான்றோர் அவையால் மதிக்கப்பெறும் சிறப்பும்,[27]

13. அறநூல்கள் விதித்த ஒழுக்கத்தில் சிறந்து நிற்கும் ஒழுக்க வீரமும்,

14. வற்றாத புகழைத்தரும் ஈகையை இடர்வரினும் தொடர்ந்து செய்யும் கொடைவீரமும்,

15. தம்மாட்டுப் பிழைசெய்தோரைப் பொறுத்துக் காக்கும் கருணை மறமும்,

16. அறம்முதலாகிய மூன்றனுள் நடுவணதாகிய பொருட்பகுதியில் அவரவர் நிலைக்கேற்பச் சிறந்து விளங்கும் பெருமிதமும், மெய்ப்பொருள் உணர்ந்து மேம்பட்ட ஞானவீரமும்,

17. பகை, நொதுமல், நட்பு என்னும் முத்திறத்தார் மாட்டும், பிற உயிர்களிடத்தும் இயல்பாகக் காட்டும் அருளுடைமை முதலான பண்புகளால் சிறந்து நிற்கும் துறவறப் பெருமிதமும்,

18. யான், எனது என்னும் இருவகைப் பற்றுகளையும் நீத்த பேராண்மையும்

என இருவகைப்பட்ட பதினெட்டுத் துறைகளை உடையது வாகைத்திணை. மறப்பண்புகளால் வீறுபெற்றுநிற்கும் மறவாகையும், அறநெறியில் சிறந்துநிற்கும் அறவாகையும் என வாகைத் திணைக்குரிய துறைகள் இருவகைப்படும். முதல் ஒன்பது துறைகளும் மறவாகை. ஏனைய அறவாகை.

---

27. இங்கு வரும் எட்டுவகை என்பதற்கு எல்லா உரையாசிரியர்களும் இளம் பூரணரைப் பின்பற்றியே மேற்கண்டவாறு பொருள் காண்கின்றர். எனினும் எட்டு என்னும் தொகை என் தொல்காப்பியர் காலத்திலேயே இந்த எட்டுப் பண்புகளைத் தான் குறித்ததா. ஓர் அவையத்திற்கு இந்த எட்டும்தான் சிறந்தன என்னும் ஒழுக லாற்று மரபு அவர் காலத்தேயே இருந்ததா என்று துணிய இயலவில்லை.

12. greatness of the assembly of eminent persons endowed with eight qualities, or greatness of a person acclaimed by such an assembly.[28]

13. virtuous conduct as prescribed by the scriptures,

14. virtue of munificence even in days of penury,

15. graceful mercy shown towards serious offenders,

16. excellence in performing one's social and economic duties, or one's attainment of spiritual enlightenment,

17. greatness of embracing the path of renunciation as a result of cultivating the virtues thereof,

18. heroic virtue of shedding irrevocably all kinds of desires.

---

28. The eight qualities are: heredity, education, virtuous conduct, truthfulness, purity, equity, and devoid of envy and desires. All the commentators follow Iḷampūraṇar in interpreting the phrase *eṭṭuvakai.* We have no means of checking whether Tolkāppiyar meant these eight qualities or something else.

76. காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கரும் சிறப்பின் பன்னெறி யானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே.

காஞ்சி என்னும் புறத்திணை பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறனாக அமையும். ஒப்பற்ற சிறப்பினை உடைய காஞ்சித்திணை நிலையற்றனவாகிய பல்வேறு வாழ்க்கை நெறி களை உடைய உலக இயல்போடு பொருந்தியதான நெறியை உடையது. அதாவது நிலையாமைப் பொருண்மையைப் பல்வேறு வாழ்க்கை நிலைகளின் அடிப்படையில் எடுத்துரைக்கும் இயல் பினது என்பதாம்.

77. மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமையும்,
கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்,
பண்புற வருஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து முடியும் மறத்தி னானும்,
ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோன்
பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்,
இன்னன் என்று இரங்கிய மன்னனை யானும்,
இன்னது பிழைப்பின் இதுவா கியன்எனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்,
இன்னகை மனைவி பேஎய் புண்ணோன்
துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்,
நீத்த கணவன் தீர்த்த வேலின்
பெயர்த்த மனைவி ஆஞ்சி யானும்,
நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும்,
முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
ஈரைந்து ஆகும் என்ப. பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
மாய்ந்த பூசல் மயக்கத் தானும்,
தாமே எய்திய தாங்கரும் பையுளும்,
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமும்,

76. kāñci tāṉē peruntiṇaip puṟaṉē
pāṅkaruñ ciṟappiṉ paṉṉeṟi yāṉum
nillā ualakam pulliya neṟittē.

Kāñcit tiṇai is the non-Akam parallel to peruntiṇai. It has the unique theme of describing the evanescence of life as it is obtained in all the essential aspects of human life

77. māṟṟaruṅ kūṟṟam cāṟṟiya perumaiyum,
kaḷintōr oḷintōrkku kāṭṭiya mutumaiyum,
paṇpuṟa varūum pakuti nōkkip
puṇkiḷittu muṭiyum maṟatti ṉāṉum,
ēmac cuṟṟam iṉṟip puṇṇōṉ
pēey ōmpiya pēeyp pakkamum,
iṉṉaṉ eṉṟu iraṅkiya maṉṉai yāṉum,
iṉṉatu piḷaippiṉ ituvā kiyaṉeṉat
tuṉṉaruñ ciṟappiṉ vañciṉat tāṉum,
iṉṉakai maṉaivi pēey puṇṇōṉ
tuṉṉutal kaṭinta toṭāak kāñciyum,
nītta kaṇavaṉ tīrtta vēliṉ
peyartta maṉaivi āñci yāṉum,
nikarttu mēlvanta vēntaṉoṭu mutukuṭi
makaṭpāṭu añciya makaṭpā lāṉum,
mulaiyum mukaṉum cērttik koṇṭōṉ
talaiyoṭu muṭinta nilaiyoṭu tokaii
īraintu ākum eṉpa. pēricai
māynta makaṉaic cuṟṟiya cuṟṟam
māynta pūcal mayakkat tāṉum,
tāmē eytiya tāṅkarum paiyuḷum,
kaṇavaṉoṭu muṭinta paṭarcci nōkkic
celvōr ceppiya mūtā ṉantamum,
naṉimiku curattiṭaik kaṇavaṉai iḷantu

தனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபா லையும்,
கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்,
காதலி இழந்த தபுதார நிலையும்,
காதலன் இழந்த தாபத நிலையும்,
நல்லோள் கணவனொடு நளியழல் புகீஇச்
சொல்லிடை இட்ட மாலை நிலையும்,
அரும்பெருஞ் சிறப்பின் புதல்வன் பயந்த
தாய்தப வருஉம் தலைப்பெயல் நிலையும்,
மலர்தலை உலகத்து மரபுநன்கு அறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு
நிறையருஞ் சிறப்பின் துறையிரண்டு உடைத்தே.

1. விலக்குதற்கு அரிய கூற்றத்தின் வலிமையை (யாக்கை நிலையாமையை) விளக்கும் பெருங்காஞ்சியும்,

2. இளமை தீர்ந்து முதுமையுற்றோர் இன்னும் இளமையாய் இருப்போர்க்கு இளமைநிலையாமையைத் தம்மையே காட்டி விளக்கும் முதுகாஞ்சியும்,

3. புகழ்விரும்பிப் பெற்றதாயினும், விழுப்புண்பட்ட உடம்புதானும் நிலையற்றதென ஓர்ந்து அப்புண்ணைக் கிழித்து மடியும் மறக் காஞ்சியும்,

4. பாதுகாக்கும் சுற்றத்தார் இல்லாமையால் புண்பட்டுக் கிடப் போனை யாமத்திலும் அருகிருந்து பேய் பாதுகாத்தலைக் கூறும் பேய்க் காஞ்சியும்,

5. இன்ன இன்ன தன்மை யுடையோன் இறந்துபட்டனனே எனப் பிறர் இரங்கிக்கூறும் மன்னைக் காஞ்சியும்,

6. இன்னவாறு செய்வேன் என மொழிந்து அவ்வாறு செய்து முடிக்கேன் ஆயின், இன்னவாறு ஆகக் கடவேன் எனக்கூறும் வஞ்சினக் காஞ்சியும்,

7. இனிய நகையார்ந்த மனைவி புண்பட்டுக் கிடந்த தன் கணவனைப் பேய் நெருங்கித் தொடாதவாறு காத்துத் தானும் அவனைத் தொடாது நிற்கும் தொடாக் காஞ்சியும்,

taṉimakaḷ pulampiya mutupā laiyum,
kaḷintōr tēettuk kaḷipaṭar uṟīi
oḷintōr pulampiya kaiyaṟu nilaiyum,
kātali iḷanta taputāra nilaiyum,
kātalaṉ iḷanta tāpata nilaiyum,
Nallōḷ kaṇavaṉoṭu naḷiyaḷal pukīic
colliṭai iṭṭa mālai nilaiyum,
arumperuñ ciṟappiṉ putalvaṉ payanta
tāytapa vaṟūum talaippeyal nilaiyum,
malartalai ulakattu marapunaṉku aṟiyap
palarcelac cellāk kāṭu vāḷttoṭu
niṟaiyaruñ ciṟappiṉ tuṟaiyiraṇṭu uṭaittē.

Kāñcit tiṇai is said to have two equal sets of tuṟai or subthemes. One according to Tolkāppiyar's tradition or his contemporary theorists; the other set according to Tolkāppiyar himself. The fact that Tolkāppiyar first enumerates the ten subthemes according to the tradition and then the other ten according to his own theory suggests that he accepts the tradition and follows it and that there would have been considerable distance from his tradition either in time or space which could have offered him sufficient data, literary and social, to formulate his own theory regarding various aspects of the theme of kāñcit tiṇai which might not have been available to his tradition.

1. the subtheme of *peruñ kāñci* demonstrates the inevitability of death to all,
2. *mutu kāñci:* elderly people describe the evanescence of youth to the young, citing themselves,
3. *maṟak kāñci:* about a warrior who kills himself by tearing up his war-wounds even though they are earned as tokens of bravery,
4. *pēyk kāñci:* about the devils who tend the wounded warrior as there are none nearest and dearest to take care of him,
5. *maṉṉaik kāñci:* a dead king or a patron or a warrior being eulogised by bards and minstrels enumerating his deeds of virtue and valour,
6. *vañciṉak kāñci:* taking a vow to become such and such, if one were to fail to do or accomplish certain tasks proclaimed by him to undertake,
7. *toṭāk kāñci:* the passionate wife of a wounded warrior guarding him against the devils' touch and herself abstaining from embracing him,

8. தன்னைவிட்டுக் கணவன் பிரிவதற்கும் அவன் உயிர் பிரிவதற்கும் காரணமாயிருந்த வேலினாலே தன்னுயிரையும் உடம்பிலிருந்து பெயர்த்துக்கொண்ட மனைவியைக் கண்டோர் அஞ்சிய ஆஞ்சிக் காஞ்சியும்,

9. தம் மகளை மணங்கொள்ளப் படையொடு வந்த வேந்தனுக்குத் தொல்குடியிற் பிறந்த தம் மகளை மணம்முடிக்க அஞ்சிய மகட்பாற் காஞ்சியும்,

10. இறந்துபட்ட தன் கணவனின் தலையைத் தன் மார்பினும் முகத்தினும் அணைத்து மனைவியும் இறந்த நிலையொடு கூடிப் பத்தாகும் என்பர் சிலர்.

11. பெரும் புகழுடையவனாய் மாய்ந்துபட்ட மறவன் ஒருவனைச் சுற்றி அவனது சுற்றத்தார் அவன் மாய்ந்தமைக்கு இரங்கி அழுத மயக்கமும்,

12. தாம் அடைந்த பொறுத்தற்கரிய துன்பத்தினைக் கூறும் நிலையும்,[29]

13. கணவன் இறந்ததும் அவனொடு தானும் இறந்து பட்ட மனைவியின் இறப்பைக் கண்டோர் பிறர்க்கு உணர்த்திய முதானந்தமும் (பெருமிதம் மிக்க சாக்காடு),

14. கொடிய சுரத்தின்கண் தன் கணவனை இழந்து தனியளாய் தலைமகள் வருந்தி அழுத முதுபாலையும் (பெரும்பிரிவு),

15. இறந்தோரைக் குறித்து அவரொடு தொடர்புடையார் மிகவும் வருந்தி இரங்கிப் புலம்பும் கையறு நிலையும்,

16. மனைவியை இழந்த கணவனது தபுதார நிலையும்,

17. கணவனை இழந்த மனைவியின் கைம்மை நோற்று உழலும் தாபத நிலையும்,

---

29. ''தாமே ஏங்கிய'' என்னும் பாடங்கொண்ட நச்சினார்க்கினியர் இதற்கு முன்னர் உள்ள துறையோடு தொடர்பு படுத்தி. ''சுற்றத்தாருமின்றி மனைவியர் தத்தம் கொழுநரைத் தழீஇயிருந்து அழுதது கண்டோர் பொறுத்தற்கரிய நோய்'' என்று பொருள் கொள்கிறார். முன்னும் பின்னும் வரும் துறைகள் கணவனை இழந்த பெண்களைப் பற்றியனவாதலின். நச்சினார்க்கினியர் கருத்து இவ்விடத்தே பொருத்தமாகப்படுகிறது. இளம்பூரணரும் பிறரும் இதனை, ஆடவர் மீது ஏற்றியுரைக்கின்றனர். இருவகையான கருத்துகளுக்கும் சங்கப் பாடல்கள் சான்றாகக் காட்டப்படுகின்றன.

8. *añcik kāñci*: people staring at a wife who killed herself with the spear which, thrown by the enemies, killed her husband and caused her the misery of widowhood,

9. *makatpāṟ kāñci* : people of ancient clan fearing to give their daughters in marriage to the invading king and rising against the king for a fatal battle,

10. Some grammarians hold that with the pitiable state of a wife dying by clasping the head of her slain husband against her chest and face, the number of subthemes pertaining to kāñcit tiṇai is ten.

11. great din and confusion caused by the close relatives of a dead warrior of great repute,

12. wives and mothers of dead warriors expressing their agonies and sorrows,[30]

13. *mūtāṉantam* : Onlookers appreciating the wife who instantaneously dies on seeing her husband dead,

14. *mutupālai*: Wife bewailing the death of her husband on the way through the arid tract,

15. *kaiyaṟu nilai*: lamenting the death of great warriors and other significant persons, by those who knew them for long,

16. *taputāra nilai*: lamentable condition of the bereaved husband,

17. *tāpata nilai*: pitiable state of the widow,

---

30. Nacciṉārkkiṉiyar has an alternate reading, 'ěnkiya' for 'eytiya' in line 21 and interprets this subtheme as relating to wives and mothers of the dead warrior. In view of the fact that both the preceding and following subthemes relate to the bereaved women, his interpretation sounds to be nearer the central run of the theme. Iḷampūraṉar and others take it to mean grief striken warriors over their misfortunes outside war. Literary evidences support both the interpretations.

18. மாய்ந்த கணவனொடு மனைவி செறிந்த ஈம நெருப்பில் புகுமிடத்து இடையிட்டுத் தடுத்தோர்க்குக் கூறும் சொல் நிலையும்,

19. அரும்பெருஞ் சிறப்பினையுடைய மகனைப்பெற்ற தாய் அவன்பொருது மடிந்தமை அறிந்து அவனொடு சேர்ந்து மடியத் துணியும் நிலையும்,

20. அகன்ற இடத்தையுடைய இவ் உலகத்தின் வரலாற்று முறைமையினை யாவரும் நன்கு உணரத்தக்க வகையில், இதன்கண் தோன்றினாரெல்லாம் மாய்ந்தொழியத் தான்மட்டும் மாயாது நிற்கும் புறங்காட்டினை வாழ்த்தும் காடு வாழ்த்தாகிய துறையோடு, ஒப்பற்ற சிறப்பினை உடைய காஞ்சித் திணை இருவகைத் துறைகளை உடையதாகும்.

''மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை முதலாகத் தலையொடு முடிந்த நிலையொடு கூடக் காஞ்சித் திணையின் துறைகள் பத்து என்று கூறுவர்.'' இப் பகுதியைப் பிறன்கோள் கூற்றாகத் தொல்காப்பியர் கூறுகிறார். அவற்றை உடம்பட்ட ஆசிரியர் பூசல் மயக்கம் முதலாகக் காடு வாழ்த்து ஈறாக வரும் வேறு பத்துத்துறைகளையும் தம்கோளாகக் கூறி, ஆகக் காஞ்சித் திணை இருவகைத் துறைகளை உடையது என்று பெற வைக்கிறார்.[31]

**78. பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடும் காலை நாலிரண்டு உடைத்தே.**

பாடாண் திணைப் பகுதி கைக்கிளை என்னும் அகத் திணைக்குப் புறனாகும். ஆராயும் காலத்து அது எட்டு வகையினை உடைத்து.

---

31. ஏனைய திணைகளுக்குத் துறைகளைத் தொகை கொடுத்து, ''ஈரேழ் துறைத்தே, எழுமூன்று துறைத்தே, துறை பதின்மூன்றே, நால்மூன்றே துறை, பன்னிரு துறைத்தே, ஒன்பதின் துறைத்தே'' என்று கூறும் தொல்காப்பியர் இங்குமட்டும், 'துறையிரண்டு உடைத்தே' எனக் கூறுவதால் இதனை விளக்குவதில் உரைகாரர்களிடையே கருத்து வேறுபாடு தோன்றலாயிற்று. பிற திணைகளின் துறைச் சூத்திரங்களின் முடிபிற்கும் இச்சூத்திரத்தின் முடிபிற்கும் வேறுபாடு காணப்படுவதால், இச்சூத்திரத்தின் இறுதிப் பகுதி சிதைந்திருக்கலாம் எனக் கருதும் ச.சோ. பாரதியாரின் ஐயம் ஏற்கத் தக்கதே.

18. words of dissent expressed by the wife to those who dissuaded her from leaping into the funeral pyre of her husband,

19. the brave decision of a mother to die with her glorious son who had a valiant death,

20. *kāṭu vāḻttu*: glorifying the cremation ground / graveyard as the only deathless entity in the wide world suggesting that everything else is subject to death and decay; thus Kāñcit tiṇai has two sets of subthemes.[32]

78. pāṭāṉ pakuti kaikkiḷaip puṟaṉē
nāṭum kālai nāliraṇṭu uṭaittē.

Pāṭāṉ tiṇai is the non-Akam parallel to Kaikkiḷait tiṇai. It is of eight kinds, when examined carefully.

32. In contrast to his method of giving the specific number of subthemes to tiṇais, veṭci through vākai, Tolkāppiyar ends this cūtra saying, 'it has two tuṟai'. Though it could be glossed as two sets of tuṟai as the commentators do, S. S. Bharatiyār's conjecture as to a probable corruption in the text towards the end seems to be sustainable.

எட்டு வகையாவன: கடவுள் வாழ்த்துவகை, வாழ்த்தியல் வகை, மங்கலவகை, செவியறிவுறுத்தல், ஆற்றுப்படைவகை, பரிசில் துறை வகை, கைக்கிளை வகை, வசைவகை என்பன.[33]

79. அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப.

அமரர்கண் முடியும் கொடிநிலை, கந்தழி, வள்ளி, புலவ ராற்றுப்படை, புகழ்தல், பரவல் என்னும் ஆறனுள்ளும், குற்றம் தீர்ந்த காமத்தைப் பொருந்தியவகையிலும் ஒரு கூற்றின் பகுதி பாடாண் திணையாதற்குப் பொருந்தும். அதாவது, கொடிநிலை முதலிய ஆறும் கடவுளைப் புகழ்தலன்றிப் பாட்டுடைத் தலைவனைச் சார்ந்து வரு வனவும், காமப்பகுதியில் இயற்பெயர்ச்சுட்டி வருவனவும் பாடாண் திணைப் பொருளாகும் என்பது கருத்து.[35]

80. வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்
முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின்று ஆங்கே.

---

33. இச்சூத்திரத்துள் வரும் 'நாலிரண்டு' என்பதற்கு எட்டு வகை என்று இளம்பூரணம் உள்ளிட்ட எல்லா உரைகளும் கூறுகின்றன. ஆயினும் எட்டு என்னும் எண்ணிக்கையை விளக்குமிடத்து ஒவ்வொரு உரையும் ஒன்றையொன்று மறுத்து வெவ்வேறு வகை களைத் தருகிறது. மேலே தரப்பட்டவை இளம்பூரணர் கூறுவன. வஞ்சி முதலாகக் காஞ்சி யீறாக உள்ள திணைகளின் முதற் சூத்திரங்கள் அவ்வத் திணைகளின் பொருண்மை யைக் கூறிப்பின்னர் அவற்றின் வகையும், துறையும் இத்துணை என்றும், பின்னர் அவ்வகைகளையும் துறைகளையும் இன்ன இன்ன என்றும் விரித்துக் கூறுகின்றன. வெட்சித் திணையின் பெயரும் வகையும் முதலில் கூறப்பட்டுப் பின்னர் அவ்வகைகள் இன்ன என்று விரித்துக் கூறப்படுகின்றன. ஆனால் பாடாண் திணை இன்ன பொருண்மைத்து என்பதும் கூறப்படவில்லை. நாலிரண்டு என்பன யாவை என்பதும் தெளிவாகக் கூறப்படவில்லை. எனவே நாலிரண்டாவன இன்ன எனத் தெளிவாக ஐயத்திற்கு இடமின்றி உணர்ந்து கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

35. 'அமரர்', அறுவகை என்னும் இரு சொற்களும் இங்குக் கருத்து வேறுபாட்டிற்கு இடந்தருவனவாக அமைந்துள்ளன. அமரர் என்பதற்குக் கடவுளர் என இளம்பூரணரும் வீரர் எனச் ச. சோ. பாரதியாரும், சிவலிங்கனாரும், பாலசுந்தரனாரும் பொருள் காண் கின்றனர். மேலே தரப்பட்டுள்ளது இளம்பூரணர் கருத்து. இதற்குரிய இலக்கியச் சான்று களை இளம்பூரணர் தரவில்லை. இடைக்காலத்தெழுந்த சிற்றிலக்கிய வகைகளை உட்கொண்டதாக இவர் உரையின் பெரும் பகுதி காணப்படுகிறது. மேலும் இவர்காட்டும் கொடி நிலை முதலாய ஆறும் பின்னர் வரும் நூற்பாக்களில் தனித்தனியே விளக்கப்படு கின்றன. வீரர்கள் எனப் பொருள் கொள்வோர் அறுவகை என்பதற்கு ஆறு வகைப் பாடாண் எனக் கொண்டு வெட்சி முதல் காஞ்சி ஈறாகிய ஆறு புறத்திணைகளுள் புகழ்தற்பொருட்டாக வரும் பகுதிகளைச் சான்று காட்டுகின்றனர். தொல்காப்பியம் மானுடம் பற்றிய ஒழுகலாறு களைப் பண்டைய இலக்கிய மரபின்படி கூறும் இலக்கணமாதலின், பாரதியார் முதலானோர் கூறும் உரை பொருத்தமாகப்படுகிறது. நச்சினார்க்கினியர் உரை தொல்காப்பியர் காலத் தமிழ் மரபோடு ஒன்றிப்போகாமை வெளிப்படை.

The eight kinds are: praise to God, praise to kings and patrons, celebration of auspicious occasions, advice and admonition, guiding the bards and minstrels to a promising patron, rewards to bards and minstrels, aspects of kaikkiḷai and rebuke.[34]

79. **amararkaṉ muṭiyum aṟuvakai yāṉum**
puraitīr kāmam pulliya vakaiyiṉum
oṉṟaṉ pakuti oṉṟum eṉpa.

Of the six kinds of literary compositions on gods such as koṭinilai, kantaḻi, vaḷḷi, pulavarāṟṟuppaṭai, pukaḻtal and paraval, and of the compositions dealing with the *akam* love, such of the portions which relate to *(human)* titular heroes belong to the theme of *pāṭāṉ*.[36]

80. **vaḷakkiyal maruṅkiṉ vakaipaṭa nilaiip**
paravalum pukaḻcciyum karutiya pāṅkiṉum
muṉṉōr kūṟiya kuṟippiṉum centuṟai
vaṇṇap pakuti varaiviṉṟu āṅkē.

---

34. There is hardly any agreement among the commentators and critics as to what the eight kinds are. The above eight are according to Iḷampūraṇar. The cūtras pertaining to all the six from veṭci through kāñcit tiṇai, first define them in terms of their themes and then give the number of kinds and subthemes and in the subsequent cūtras enumerate them in detail. But the cūtras relaing to pāṭāṉ do neither define the theme nor enumerate the eight kinds in detail, a deviation from the method followed in regard to the earlier tiṇais. Hence the irreconcilable differences of opinion among the commentators, not only with regard to this cūtra and but also with regard to several that follow dealing with pāṭāṉ. Thus it remains a crux.

36. The terms 'amarar' and 'aṟuvakai' are interpreted differently by different commentators. Iḷampūraṇar whose interpretation is given above, takes them to mean 'gods' and 'six kinds' as given above. He does not cite literary texts as illustrations to elucidate his views. His interpretation might have been suggested by medieval texts which answer to his descriptions. Moreover, the six kinds detailed by him are treated separately by Tolkāppiyar in the succeeding cūtras.

S.S. Bharatiyar, Sivalinganar and Balasundaram take the term 'amarar' to mean warriors and 'aṟuvakai' to mean the appropriate aspects of the earlier six tiṇais in so far as they constitute the praise of the warriors, and cite literary evidences from caṅkam works wherever available. Nacciṉārkkiṉiyar's interpretation is simply beside the point.

Tolkāppiyam being a treatise on the poetical conventions of the ancient Tamils and since both Akam and Puṟam theories relate to the idealised aspects of human life, the interpretations provided by Bharatiyār and others sound to be more relevant to the context.

பாடாண் பொருண்மையைப் புலனெறி வழக்கிற்கேற்ப வகைப்படுத்திப் பாடுமிடத்துப் பரவலும், புகழ்ச்சியும் பற்றிக் கூறு மிடத்தும், முன்னோர் கூறிய குறிப்பில் பாடுமிடத்தும் செந்துறை வண்ணத்தில் பாடுவது கடியப்படாது. அதாவது, கடவுளரைப் புகழ்ந்துபாடும் தேவபாணியும், காமம் பற்றிப் பாடும் பாட்டும் பாடாண் பொருளில் பாடப்படும் பொழுது செந்துறைப் பாட்டிற்குரிய செய்யுள் வடிவில் பாடுவது கடியப்படுதல் இல்லை. எல்லாச் செய் யுளும் இதற்குப் பொருந்தும் என்பது கருத்து. (பாடாண் பொருள் இல்லாதவிடத்து செந்துறை வண்ணமாகப் பாடப் பெறுதல் மரபு).[37]

81. காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்.

கடவுளர் மாட்டும் மானுடர் மாட்டும் காமம் பொருளாகப் பாடப்பெறும் மரபு பாடாண்திணைக்குரியது என்று கூறுவர் புலவர். அதாவது கடவுளர் மாட்டுத் தெய்வப் பெண்டிரும் மானுடப்பெண்டி ரும் காதல் கொள்வதாகப் பாடுதல் பாடாண்திணையைச் சேர்ந்த தாகும் என்பது கருத்து.

---

37. இச்சூத்திரத்தில் வரும் 'முன்னோர் கூறிய குறிப்பு', செந்துறை வண்ணம்' என்னும் தொடர்களுக்குப் பொருள் கொள்வதில் உரையாசிரியர்களிடையே கருத்துவேறுபாடு காணப்படுகிறது. 'முன்னோர் கூறிய குறிப்பு' என்பதற்கு 'அகப்பொருள் பாடும் பாட்டு' என்று இளம்பூரணரும், "அறம் பொருளின்பங்களின் கூறுபாடு தோன்ற முன்னுள்ளோர் கூறிய குறிப்புப் பொருள்" என்று நச்சினார்க்கினியரும், "அறநெறி முறைமையாக முன்னோர் கூறிய உறுதிப்பொருள்" என்று பாலசுந்தரனாரும்," பரவலும் புகழ்தலும் அல்லாப் பிற துறைகள்" என்று ச.சோ. பாரதியாரும் பொருள் காண்கின்றனர்.

'செந்துறை வண்ணம்' என்பதற்குச் செந்துறைப்பாட்டு என இளம்பூரணரும், "உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல்" என நச்சினார்க்கினியரும், 'இசைத்தமிழ்ப் பாட்டுவகை' எனச் ச.சோ. பாரதியாரும், "உயர்வு நவிற் சியின்றிப் பட்டாங்குக் கூறும் முறைமை" எனப் பாலசுந்தரனாரும் பொருள் காண்கின்றனர். வண்ணம் என்பதற்கு இசைக்கூறு எனப் பாரதியாரும், வண்ணித்துக் கூறுதல் எனப் பாலசுந்தரனாரும் பொருள் கொள்வர். நால்வகைச் சாதிப் பிரிவுகள் எனப் பொருள் கொள்ளும் நச்சினார்க்கினியர் கருத்து சூத்திரப் பொருளோடு பொருந்தாமை வெளிப்படை.

"பிற திணைகளிற் போலப் பாடாணிலும் இயற்பாக்கள் பெரிதும் வழங்கும். இங்குக் குறித்த சில பாடாண் வகைகளுக்கு மட்டும் இயற்பாக்களே யன்றி இசைப்பா வண்ணக்கூறுகளும் வந்து பயில்வதும் உண்டு" என்னும் ச.சோ. பாரதியாரின் உரை இச்சூத்திரத்திற்குப் பெரிதும் பொருந்திவரக் காணலாம். மேலே தரப்பட்டுள்ள இளம் பூரணரின் உரையோடு பெரும்பாலும் இது ஒட்டிச் செல்வதையும் காணலாம்.

In accordance with the poetic conventions, the themes of praising, in person (ode) and in absence, and of love may be composed in any poetic form, not excluding the centuṟai vaṇṇam.[38]

81. kāmap pakuti kaṭavuḷum varaiyār
ēṉōr pāṅkiṉum eṉmaṉār pulavar.

To sing of female deities and earthly women to be in love with gods is not forbidden, say the grammarians. That is to say, to portray she - gods and women as in love with gods is also, according to the tradition, considered as a subtheme of *pāṭāṉ tiṇai.*

---

38. The phrases, 'muṉṉōr kūṟiya kuṟippu' and 'Centuṟai Vaṇṇam' are interpreted in various ways. Iḷampūraṇar takes the former to mean akam poetry, Nacciṉārkkiṉiyar to mean the theme of tirivarga followed by Balasundaram and S.S. Bharatiyār to mean themes other than two kinds of praising.

Centuṟai Vaṇṇam' is interpreted as 'centuṟaip pāttu' by Iḷampūraṇar, "to sing of persons as they are found in this world" by Nacciṉārkkiṉiyar, 'a kind of poetry set to music' by S.S. Bharatiyār and as 'to sing of persons without exaggeration by Balasundaram.

'Vaṇṇam' is interpreted as 'a kind of musical composition' by S.S. Bharatiyār, 'to describe' by Balasundaram and as 'four kinds of castes' by Nacciṉārkkiṉiyar. It is obvious that Nacciṉārkkiṉiyar's interpretation is farfetched and irrelevant to the context.

"*Pāṭāṉ tiṇai* is, like the earlier tiṇais generally composed as *iyaṟpā*, that is, verses without being set to music. The above mentioned subthemes of pāṭāṉ may, however, be composed either as *iyaṟpā* or as *icaippā*, that is, verses set to music." This interpretation by Bharatiyār, generally agreeing with that of Iḷampūraṇar, goes very well with the text.

82. குழவி மருங்கினும் கிழவ தாகும்.

மிகவும் இளையோர் மாட்டுக் காமம் நிகழ்வதாகப் பாடுதலும் பாடாண்திணைக்கு உரியதாகும்.[39]

83. ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப வழக்கொடு சிவணிய வகைமை யான.

அரசனும் அவனை ஒத்தாரும் ஊரின்கண் உலாவருதலும் பாடாண் திணைக்குரிய பொருளாகும் என்று கூறுவர். அங்ஙனம் பாடுமிடத்துச் சான்றோர் தம் புலனெறி வழக்கோடும், உலக வழக் கோடும் பொருந்திய வகையில் பாடப்பெறும்.[41]

---

